
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூன் 2010
ரூ. 7.00











## அரசின் நிலப்பறிப்புக்கு எதிராக

# ஒரிசா மக்களின் கலகம்

படிப்பகம்

www.padippakam.com



# கொலைகார போலீசைப் பாதுகாக்கும் சித்திரவதைத் தடுப்பு மசோதா!

அண்மையில், உள்துறை இணை அமைச்சர் நாடாளுமன்றத்தில் சித்திரவதை தடுப்பு மசோதா (2008)-ஐ அறிமுகப்படுத்தினார். போலீசாரால் நடத்தப்படும் சித்திரவதைகளுக்குத் தண்டனை அளிக்கும் நோக்கத்துடன் இந்த மசோதா கொண்டுவரப்படுவதாக அமைச்சர் ஆரவாரமாக அறிவித்துள்ளார். கடந்த ஏப்ரல் 8-ஆம் தேதியன்று சித்திரவதை தடுப்பு முன்வரைவு மசோதாவுக்கான பரிந்துரைகளுக்கு நாடாளுமன்றம் ஒப்புதலும் அளித்துள்ளது.

சித்திரவதை, கொடூரமான மற்றும் மனிதத்தன்மையற்ற வதைகளுக்கு எதிராக ஐ.நா.மன்ற மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை ஏற்று இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. சித்திரவதைகளைத் தடுக்க 146 உறுதியேற்புகள் ஐ.நா.மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை ஏற்று இந்திய அரசு இன்னமும் செயல்படுத்தவில்லை. இந்நிலையில், இப்படியொரு மசோதாவைக் கொண்டுவருவதன் நோக்கமே, அனைத்துலக அரங்கில் இந்திய அரசு தனது மதிப்பை உயர்த்திக் கொள்ளவும், தனது மக்களைச் சித்திரவதைக் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பதாக வீண்பெருமை பேசி செயற்கையாக ஒப்பனை செய்து கொள்வதற்கும்தான்.

இந்த மசோதாவின் 3-வது பிரிவு, ''சித்திரவதை என்பது திட்டமிட்டு செய்யும் உள்நோக்கம் கொண்ட செயல்'' என்றும், ''கடுமையான பாதிப்பை அல்லது அபாயத்தை உயிருக்கோ உடலுறுப்புகளுக்கோ உடல் நலத்துக்கோ ஏற்படுத்துவதாகும்'' என்றும் வரையறுக்கிறது. ஆனால், இம்மசோதாவின் 3-வது விதியின் உட்பிரிவோ, ''உடல்ரீதியாகவோ, மனரீதியாகவோ அபாயகரமாகப் பாதிக்கப்படுவது'' என்பதை மருத்துவரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பாதிப்பாக இருக்க வேண்டும் என்கிறது.

அதாவது, உடல் ரீதியாக கடுமையான வலியை ஏற்படுத்துவதாக இருந்தால்தான், அது அபாயகரமான பாதிப்பு. மற்றபடி உடல் நலத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல், மனரீதியாக எந்தப் பாதிப்பு ஏற்பட்டாலும் அது ''பாதிப்பு'' அல்ல, அதற்குப் பெயர் ''சித்திரவதை'' அல்ல என்கிறது, இந்த மசோதா.

அதாவது, தண்ணீர் தொட்டியில் தலையை அழுத்தி மூழ்க வைத்து மூச்சுத் திணறவைப்பது, பாலியல் வன்முறையை ஏவுவது, சோறு-தண்ணீர் கொடுக்காமல் பட்டினி போட்டு வதைப்பது, தூங்கவிடாமல் வதைப்பது, சவுக்கால் அடிப்பது, பிறப்புறுப்பில் மிளகாய்ப் பொடியைத் திணித்து தேய்ப்பது, கணுக்காலில் நாள் முழுக்க ''கிளிப்'' போடுவது, தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுவது - முதலான இதர காட்டுமிராண்டித்தனமான போலீசு சித்திரவதைகள் அனைத்தும் இம்மசோதாவின்படி, ''சித்திரவதை'' கிடையாது. ஏனென்றால், ''இதர கொடூரமான, மனிதத்தன்மையற்ற, கண்ணியமற்ற செயல்பாடுகள்'' பற்றி இந்த மசோதா மவுனம் சாதிக்கிறது. ஆனால், இந்த அம்சம்தான் ஐ.நா. மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ள மிக அடிப்படையான அம்சமாகும்.

இந்த மசோதாவின் 4-வது விதியானது, உண்மையை வரவழைக்க அல்லது வாக்குமூலம் அளிக்க வைக்க, ஒரு போலீசுக்காரன் சித்திரவதை செய்தால் மட்டுமே அது தண்டனைக்குரிய குற்றம். மிரட்டி அச்சுறுத்துவது, பணம் பறிப்பதற்காக வதைப்பது, பாடம் புகட்டுவதற்காக அடித்து நொறுக்குவது அல்லது வேறு ஏதாவது காரணங்களுக்காக வதைப்பது முதலானவையெல்லாம் தண்டனைக்குரிய சித்திரவதைகள் அல்ல. பொய்க்குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து பணம் கறப்பதற்காக இத்தகைய சித்திரவதைகளை மேற்கொண்டால், அந்தப் போலீசுக்காரனை இந்த மசோதாவின்படி தண்டிக்க முடியாது.

உண்மையை வரவழைப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு 'சிகிச்சை'(ட்ரீட்மெண்ட்) அளிப்பது

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்:8
ஜூன் 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

# நீதித்துறையை ஆள்கிறது இந்து மனசாட்சி!

அஜ்மல் கசாபுக்கு தூக்கு தண்டனை - நாடாளுமன்றத் தாக்குதல் நாடகத்தில் தூக்கு தண்டனை விதிக்கப்பெற்ற அப்சல் குருவையும் உடனே தூக்கில் போடச்சொல்லி ஆர்ப்பாட்டம். பாபர் மசூதி இடிப்பு வழக்கில் சதித் திட்டம் தீட்டிய குற்றத்திலிருந்து அத்வானி, ஜோஷி முதலான சங்கப்பரிவாரத் தலைவர்கள் அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் விடுவிப்பு - தன்னுடைய தங்கையை காதல் மணம் செய்த ஈழவ சாதி இளைஞனையும் அவரது குடும்பத்தினரையும் வெட்டிக் கொன்ற தீபக் என்ற பார்ப்பன சாதிவெறியனுக்கு உச்சநீதி மன்றத்தில் தூக்கு தண்டனை ரத்து. இத்தீர்ப்புகளுக்கிடையில் இழையோடும் ஒற்றுமை, இந்நாட்டின் நீதித்துறை, அரசு, அரசியல் கட்சிகள், ஊடகங்கள், பொதுக்கருத்து ஆகியவையனைத்தையும் ஆளுகின்ற பொது உளவியலை, பளிச்சென்று காட்டுகிறது.

மும்பைத் தாக்குதல் வழக்கில், கசாபுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்துக்குரியதல்ல. ''தானே முன்வந்து முஜாகிதீன் படையில் இணைந்து பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டது, சதித் திட்டம் தீட்டியது, இந்தியாவுக்கு எதிராகப் போர் தொடுத்தது, அப்பாவிகளைக் கொலை செய்தது ஆகிய குற்றங்களை கசாப் இழைத்திருப்பதாகவும், அவன் திருந்துவதற்கான வாய்ப்பே இல்லை என்பதால், தூக்கு தண்டனை விதிப்பதாகவும்'' அத்தீர்ப்பு கூறுகிறது.

அஜ்மல் கசாப் செய்த கொலைகளுக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் மறுக்க முடியாத வீடியோ ஆதாரங்கள் இருப்பதைப் போலவே, கசாப் போன்ற கருவிகள் உருவாகக் காரணமாக இருக்கும் புறவயமான அரசியல் சூழ்நிலைகளுக்கும் மறுக்க முடியாத ஆதாரங்கள் இருக்கத்தான் செய்கின்றன. 80-களில் பாகிஸ்தானில் அமெரிக்கா உருவாக்கிய இசுலாமியத் தீவிரவாதம், அதே காலகட்டத்தில் இந்தியாவில் தலைவிரித்தாடிய பார்ப்பன பாசிசம், இந்திய அரசு காஷ்மீரில் நடத்தும் இராணுவ ஒடுக்குமுறை, தன்னுடைய சொந்த நோக்கங்களுக்காக இளைஞர்களை இசுலாமியத் தீவிரவாதத்துக்கு ஆட்படுத்தி இந்தியாவின் மீது ஏவிவிடும் பாகிஸ்தான் உளவுத்துறையின் நடவடிக்கைகள் - என்ற இந்த அரசியல் பின்புலத்தில் அகப்பட்டுக்கொண்ட பாகிஸ்தானின் ஏதோ ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் - அஜ்மல் கசாப். அவன் இசுலாமியத் தீவிரவாதத்தின் கையில் அகப்பட்ட இன்னொரு கருவி.

எந்தக் குற்றங்களுக்காக கசாப்பைத் தூக்குமேடைக்கு அனுப்பவேண்டும் என்று நீதிமன்றம் கூறுகிறதோ, அந்தக் குற்றத்தின் மூலவர்களான பாகிஸ்தான் ஆளும் வர்க்கத்துடன் பிரதமர் மன்மோகன் சிங்கும், தாஜ் பாலஸ் மீதான தாக்குதலைக் கண்டு ரத்தக் கண்ணீர் வடித்த இந்தியத் தரகு முதலாளிகளும் கைகுலுக்கிக் கொண்டிருக்கிறார்கள். பாகிஸ்தானையும் உள்ளடக்கிய தெற்காசிய சுதந்திர வர்த்தக வலையம்தான் இந்திய ஆளும் வர்க்கங்களின் கனவு என்பதால், பாகிஸ்தான் அரசு மனம் திருந்திவிடும் என்று மன்மோகன் சிங் நம்புகிறார். கசாப் மனம் திருந்த வாய்ப்பே இல்லை என்று மரணதண்டனை விதிக்கிறது நீதிமன்றம்.

கசாபுக்குத் தூக்கு என்று தீர்ப்பு வந்தவுடனேயே, ''அப்சல் குருவையும் உடனே தூக்கிலிடு'' என்று பாரதிய ஜனதா ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கியது. இந்து தேசவெறிப் பொதுக்கருத்தை அரவணைத்துக் கொள்வதற்காக, உடனே அதனை வழிமொழிந்தார், காங்கிரசு கட்சியைச் சேர்ந்த திக்விஜய் சிங். மன்மோகன் சிங்கோ 'சட்டம் தன் கடமையைச் செய்யும்' என்று வழுக்கினார். அப்சல் குரு வழக்கில் சட்டம் தன் கடமையை எப்படிச் செய்தது?

ஆகஸ்டு, 2005-இல் அப்சல் குருவின் மேல் முறையீட்டை விசாரித்த உச்சநீதி மன்றம், போலீசு சமர்ப்பித்த அப்சல் குருவின் ஒப்புதல் வாக்கு


படிப்பகம்



இந்தியா-பாகிஸ்தான் இடையே நடக்கும் போட்டி அரசியலின் பின்புலத்தில் அகப்பட்டுக் கொண்ட அஜ்மல் கசாப்.

மூலத்தை ஒரு சாட்சியமாகவே ஏற்க முடியாது என்பதையும், குற்றவாளிக்கு எதிராக வேறு சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதையும் ஒப்புக் கொண்டது. எனினும், ''மரண தண்டனை விதிக்கப்பட்டால்தான் சமூகத்தின் கூட்டு மனச்சாட்சி திருப்தி அடையும்'' என்று கூறி அப்சல் குருவின் தூக்கு தண்டனையை உறுதி செய்தது.

எந்த வாக்குமூலத்தை டெல்லி உயர்நீதி மன்றமும், உச்சநீதி மன்றமும் நிராகரித்தனவோ, (பாகிஸ்தானின் தூண்டுதலின் பேரில்தான் நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் தொடுத்தோம் என்று அப்சல் குரு ஒப்புக் கொண்டதாக போலீசு தாக்கல் செய்த வாக்குமூலம்) அதையே அசைக்கமுடியாத ஆதாரமாகக் காட்டி, 5 இலட்சம் துருப்புகளை எல்லையில் கொண்டு போய் நிறுத்தி, டிசம்பர் 2001-இல் பாகிஸ்தானுக்கு எதிரான போர் ஆயத்தங்களைச் செய்தது பாரதிய ஜனதா அரசு. நாடாளுமன்றத்தின் மீதான தாக்குதல் என்ற பெயரில் சங்கப்பரிவாரம் நடத்திய இந்தக் கபட நாடகத்தில், நாடாளுமன்றத்துக்குக் காவல் நின்ற பாதுகாப்புப் படையினர் பலர் கொல்லப்பட்டது மட்டுமின்றி, உறைபனிக் குளிரில் நோக்கமின்றி நிறுத்தப்பட்ட பல இராணுவச் சிப்பாய்கள் மன அழுத்தத்தால் தற்கொலையும் செய்து கொண்டனர். -று கோடி மக்களை ஏமாற்றி, துணைக்கண்டத்தையே ஒரு அணு ஆயுதப்போரின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்திய 'நாடாளுமன்றத் தாக்குதல்' என்ற மோசடி நாடகத்தை அம்பலப்படுத்துவதற்கு காங்கிரசு முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரையிலான ஓட்டுக்கட்சிகள் யாரும் இன்று வரை தயாராக இல்லை. இதனை அம்பலப்படுத்தக்கூடிய ஒரே நேரடி சாட்சியை ஒழித்துக் கட்டுவதற்காக, ''அப்சல் குருவை உடனே தூக்கிலிட வேண்டும்'' என்று இந்து தேசத்தின் 'மனச்சாட்சியின் பெயரால் மிரட்டுகிறது, பாரதிய ஜனதா.

பாபர் மசூதியை இடிப்பதற்கு சதித்திட்டம் தீட்டியதாகத் தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து அத்வானி, ஜோஷி, வினய் கட்டியார் போன்ற சதிகாரர்கள் அனைவரையும் விடுவித்து, 2003-இல் பைசாபாத் அமர்வு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை தற்போது ஆமோதித்திருக்கிறது அலகாபாத் உயர்நீதி மன்றம். 1992 முதலே மசூதி இடிப்பு தொடர்பான வழக்குகள் திட்டமிட்டே ஒரு நீதிமன்றத்திலிருந்து இன்னொரு நீதிமன்றத்துக்குப் பந்தாடப்பட்டன. வழக்கை விசாரிக்கும் புலனாய்வுத் துறைகள் மாற்றப்பட்டன. அத்வானி வகையறாவை தப்ப வைக்கும் நோக்கத்துடன், தொழில்நுட்பத் தவறுகள் திட்டமிட்டே இழைக்கப்பட்டன.



'தேசத்தின் இந்து' மனசாட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக, உச்சநீதி மன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அப்சல் குரு.


இந்த 17 ஆண்டுகளில் டில்லியிலும் உ.பி.யிலும் ஆட்சியில் இருந்த பா.ஜ.க., காங்., ஐ.முன்னணி, முலாயம், மாயாவதி ஆகிய அனைவரும் அத்வானி உள்ளிட்ட சங்கப்பரிவாரத் தலைவர்களை விடுவிப்பதற்கு உதவியிருக்கின்றனர். இவை அனைத்தின் இறுதி விளைவுதான் தற்போதைய தீர்ப்பு.

பாபர் மசூதி இடிப்பு என்பது, மும்பை தாஜ் பேலஸ் மீதான தாக்குதலைப் போல இரகசியச் சதித்திட்டம் தீட்டி, திடீரென்று நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. வரலாற்றுப் புரட்டுகளையும் பொய்களையும் அடிப்படையாகக் கொண்டு, பார்ப்பன பாசிசக் கும்பல் நாடு முழுவதும் திட்டமிட்டே அரங்கேற்றிய ஒரு அரசியல் சதியின் இறுதிக் காட்சிதான் பாபர் மசூதி இடிப்பு. அது இறுதிக் காட்சியும் அல்ல என்பதை அதனைத் தொடர்ந்து வந்த மும்பை, குஜராத் படுகொலைகள் நிரூபித்தன. ரைஷ்டாக் தீவைப்பில் தொடங்கி, ஆக்கிரமிப்புகள், யூதப் படுகொலைகள் போன்ற பல சதிகளுக்கும் குற்றங்களுக்கும் அடிப்படையாக இருந்தது ஹிட்லரின் நாஜிசம். அந்த அரசியலை விட்டுவிட்டு, யூதப் படுகொலையை மட்டும் சதித்திட்டமாக யாரும் சித்தரிப்பதில்லை. ஆனால், இந்து தேசியம் எனும் பாசிச கிரிமினல் அரசியலைச் சட்டபூர்வமானதாக அங்கீகரித்துக்கொண்டு, மசூதி இடிப்பை மட்டும் தனி

> பாகிஸ்தான் அரசு மனம் திருந்திவிடும் என்று மன்மோகன் சிங் நம்புகிறார். கசாப் மனம் திருந்த வாய்ப்பே இல்லை என்று மரணதண்டனை விதிக்கிறது நீதிமன்றம்.

யொரு சதித் திட்டமாகக் காட்டும் பித்தலாட்டம்தான் அயோத்தி வழக்கு என்ற பெயரில் நடத்தப்பட்டு வருகிறது. ஓட்டுக்கட்சிகள், ஊடகங்கள், அதிகார வர்க்கம், நீதித்துறை போன்ற இந்திய ஜனநாயகத்தின் எல்லாத் தூண்களாலும் முட்டுக் கொடுத்து நிறுத்தப்பட்டிருக்கும் இந்தப் பித்தலாட்டம், அதன் தர்க்க ரீதியான முடிவை எட்டியிருக்கிறது.

1983 வரை உள்ளூரிலேயே விலைபோகாமலிருந்த ஒரு பிரச்சினையைத் 'தேசிய'ப் பிரச்சினையாக்கி, ரத யாத்திரை நடத்தி நாடு முழுவதையும் ரத்தக் களறியாக்கி, பின்னர் 1992-இல் மசூதியை இடிப்பை முன் நின்று நடத்திய அத்வானி உள்ளிட்ட படுகொலை நாயகர்கள் சதி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டனர். இந்து மதவெறியின் காலாட்படையாக செயல்பட்ட ஊர்பேர் தெரியாத சில 'அஜ்மல் கசாப்'கள்தான், மசூதி இடிப்புக்கு சதித்திட்டம் தீட்டிய குற்றவாளிகளாக தற்போது வழக்கில் எஞ்சியிருக்கின்றனர். மசூதி இடிப்பில், அத்வானி உள்ளிட்ட தலைவர்களின் நேரடிப் பாத்திரம் பற்றியும், உயர்நீதி மன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் மறைமுகப் பாத்திரம் பற்றியும் சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட லிபரான் கமிசன் அறிக்கை ஆதாரங்களுடன் விவரித்த போதிலும், அத்வானியின் பாதுகாப்பு அதிகாரியாகச் செயல்பட்ட அஞ்சு குப்தா சாட்சியமளித்த போதிலும், காங்கிரசு அரசு அசைந்து கொடுக்கவில்லை. அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் தற்போதைய தீர்ப்பின் மீதும் மேற்கூறிய உண்மைகள் எந்தவித செல்வாக்கையும் செலுத்தவில்லை. ஏனென்றால், இந்திய ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் இந்த 'பேலூர் தூண்களுக்கு' அடியில் கண்ணுக்குப் புலப்படாத ஒரு இடைவெளி இருக்கிறது. அதனுள் ஒரு காகிதத்தைப் போல நுழைந்து வெளியே வருகிறது இந்து மனச்சாட்சி.



பாபர் மசூதி இடிப்புக்கும், அதற்கு முன்பும் பின்பும் நடந்த ரத்தக் களறிக்கும் தளபதியாகச் செயல்பட்ட அத்வானியை நீதிமன்றத்தின் இந்து மனசாட்சி விடுதலை செய்துவிட்டது.

தன்னுடைய தங்கையைக் காதல் மணம் செய்த ஈழவ சாதி இளைஞன் பிரபு, அவனது தந்தை மற்றும் வீட்டிலிருந்த இரு குழந்தைகளை வெட்டிக் கொலை செய்த தீபக் என்ற பார்ப்பன சாதி வெறியனுக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்கு தண்டனையை ரத்து செய்த உச்ச நீதிமன்றம் (டிசம்பர் 2009), ''தவறானதாக இருந்தபோதிலும், இயல்பான சாதி உணர்வுக்குத்தான் தீபக் பலியாகியிருக்கிறான் எனும்போது, அவனைத் தூக்கிலிடுவது நியாயம் ஆகாது. சாதி, மத மறுப்பு திருமணம் போன்ற சமூகப் பிரச்சினைகள் தொடர்பான குற்றங்கள் இழைக்கப்படும்போது, அவை எவ்வளவுதான் நியாயமற்றவையாக இருந்தபோதிலும், குற்றவாளியின் உளவியலைக் கணக்கில் கொள்ளவேண்டியிருக்கிறது'' என்று கூறியிருக்கிறது.

சாட்சியங்களே இல்லாதபோதும், அப்சல் குருவின் மரணதண்டனையை நியாயப்படுத்த, பாதிக்கப்பட்ட தேசத்தின் மனோநிலையைத் துணைக்கழைத்த உச்சநீதிமன்றம், பார்ப்பன சாதி வெறியனைக் காப்பாற்ற விழையும்போது, குற்றவாளியின் மனோநிலையைப் பரிசீலிக்கச் சொல்கிறது. இதே அளவுகோலின் படி அஜ்மல் கசாபின் உளவியலைப் பரிசீலித்தால், குஜராத் முஸ்லிம்கள் வேட்டையாடப்படுவதைக் கண்டு இசுலாமியத் தீவிரவாதத்துக்கு பலியான அந்த இளைஞனின் தூக்கு தண்டனையையும் ரத்து செய்ய வேண்டியிருக்கும். எனினும் நீதிமன்றம் அப்படிச் சிந்திக்கவில்லை. சிந்திப்பதில்லை.

மும்பய்த் தாக்குதலில் ஈடுபட்ட கசாபுக்குத் தூக்குத் தண்டனை விதித்த நீதிமன்றம், மும்பய்க் கலவரத்தை (கோப்புப் படம்) நடத்திய பால் தாக்கரேயைத் தண்டிக்கத் தயங்குவது ஏன்?



வெவ்வேறு வழக்குகள்.. வெவ்வேறு நீதிமன்றங்கள்... ஆனாலும் அவற்றின் தீர்ப்புகளை ஆளுகின்ற உளவியல், ஆதிக்க சாதி இந்து மனத்திலிருந்தே பிறக்கிறது. இந்திய அரசியல் சட்டம், இந்தியக் குற்றவியில் நடைமுறைச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம்... எல்லாம் இருக்கத்தான் செய்கின்றன - காகிதத்தில்.

இந்திய நீதித்துறையின் இதயத்தை இந்து மனச்சாட்சி தான் வழி நடத்துகிறது.

•

www.padippakam.com

# அரசின் நிலப்பறிப்புக்கு எதிராக ஒரிசா மக்களின் கலகம்

**தனியார்மயத்திற்கு எதிரான போராட்டங்களை அடக்குமுறைகளால் நசுக்கிவிட முடியாது என்பதற்கான களச்சான்று.**



போலீசு மற்றும் டாடா-போஸ்கோ குண்டர் படையின் அட்டூழியங்களுக்கு எதிராக கலிங்காநகரில் கடந்த மே 19-ஆம் தேதியன்று விவசாயிகள் நடத்திய மாபெரும் தர்ணா போராட்டம்.

ஒரிசாவின் கலிங்கா நகர் வட்டாரத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்கள், போஸ்கோ மற்றும் டாடா நிறுவனங்களுக்கு எதிரான தங்களது தொடர்ச்சியான போராட்டத்தின் மூலம் புதிய கலிங்கத்துப் பரணியை எழுதி வருகிறார்கள். பல்வேறு அடக்குமுறைகளை எதிர்கொண்டு ஒரிசா மக்களின் போஸ்கோ எதிர்ப்புப் போராட்டம் பற்றிப் படர்ந்து வருகிறது.

இந்தியாவின் மிகப்பெரிய அந்நிய முதலீட்டுத் திட்டமான தென்கொரியாவின் போஸ்கோ எஃகு ஆலைத் திட்டத்திற்கு எதிராக, போஸ்கோ பிரதிரோத் சங்கராம் சமிதி (பி.பி.எஸ்.எஸ்) என்ற அமைப்பின் தலைமையில் ஒரிசாவின் ஜெகத்சிங்புர் மாவட்டத்திலுள்ள கலிங்கா நகர் வட்டார மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு கடந்த ஐந்தாண்டுகளாகத் தொடர்ந்து போராடி வருகின்றனர். கடந்த ஜனவரி 26-ஆம் தேதியிலிருந்து போஸ்கோ திட்டத்திற்கு எதிராகக் காலவரையற்ற ''தர்ணா'' போராட்டத்தை அவர்கள் நடத்தி வருகின்றனர்.

போஸ்கோ மற்றும் டாடாவின் எஃகு ஆலைத் திட்டங்களால் 11 கிராமங்களிலுள்ள 30,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் வாழ்விழந்து சொந்த மண்ணைவிட்டு வெளியேற்றப்படவுள்ளனர். இந்நிலப்பறிப்பை எதிர்த்து விவசாயிகள் நடத்திவரும் போராட்டங்களை ஒடுக்க 25 பிளாட்டூன் (ஏறத்தாழ 900 பேர் கொண்ட) துணை இராணுவப் படைகள் இப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரியில் கலிங்கா நகர் தொழிற்பேட்டை பகுதியில் டாடா நிறுவனம் புதிதாகச் சாலை அமைப்பதை எதிர்த்துப் பழங்குடி மக்கள் போராடிய போது, போலீசார் ரப்பர் குண்டுகளைக் கொண்டு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டுப் பழங்குடியினர் 500 பேருக்கு மேல் வில், அம்பு, கோடரியுடன் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தபோது, அவர்களை விரட்ட போலீசு இத்தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் 6 பேர் படுகாயமடைந்தனர். ''பழங்குடியினருக்குச் சொந்தமான நிலத்தைச் சட்டவிரோதமாகப் பறித்துக் கொண்டு டாடாவுக்குத் தாரை வார்ப்பதையும், இதைத் தொழில் வளர்ச்சி என்று நியாயப்படுத்துவதையும் நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்'' என்கிறார் இச்சங்கத்தின் செயலாளரான ரவீந்திர ஜாரிகா.

2006-ஆம் ஆண்டு போஸ்கோவின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிய 14 பேர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதிலிருந்து கலிங்கா நகர் மக்களின் போராட்டங்கள் தொடர்கின்றன. இப்பகுதியில் மட்டும் 500 பேர் கொண்ட கூலிப்படையை வைத்துள்ள டாடா நிறுவனம், அதனைக் கொண்டு போராடும் மக்களை நேரடி


படிப்பகம்

யாகவே தாக்கி வருகிறது. இதன் உச்சகட்டமாக கடந்த மார்ச் மாதம் 30-ஆம் தேதி டாடாவின் குண்டர் படை பாலிகோதா கிராமத்தில் மிகப் பெரிய தாக்குதலை நடத்தியது. காட்டு வேட்டைக்கெனக் கொண்டுவரப்பட்ட துணை இராணுவப் படைகள் டாடாவின் குண்டர்களுடன் இணைந்து கொண்டு மக்களின் வீடுகளைக் கொளுத்தி, கால்நடைகளைக் கொன்றதுடன், குடிநீர் கிணற்றில் பெட்ரோலை ஊற்றின. 2006-இல் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் நினைவிடங்களைச் சிதைத்துள்ளன.



சாந்தியா கிராமத்தில் தர்ணா போராட்டம் நடத்திய விவசாயிகளைத் தாக்கி, போராட்ட அரங்கின் கொட்டகைகளைத் தீயிட்டுக் கொளுத்திய போலீசாரின் பயங்கரவாத வெறியாட்டம்.

ஜெகத்சிங்புர் மாவட்டத்தில் போஸ்கோ ஆலை அமையவுள்ள கிராமங்களுக்குச் செல்லும் பாதைகள் அனைத்தும் போலீசாராலும் குண்டர் படைகளாலும் முற்றுகையிடப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. மருத்துவ உதவிக்காகக் கூட யாரும் வெளியே செல்லவோ, மருத்துவர்கள் உள்ளே வரவோ அனுமதிக்கப்படவில்லை. இதன் விளைவாக பாலிகோதா கிராமத்தை சேர்ந்த கானசயம் காலுந்தியா என்பவர், முறையான மருத்துவ வசதி கிடைக்காததால் இறந்து விட்டார். இதே கிராமத்தில் ஏற்கனவே இரண்டு பேர் சரியான மருத்துவ வசதி இல்லாத காரணத்தால் உயிர் இழக்க நேரிட்டது. வெளியார் எவரும் அங்கே செல்லவிடாது தடுக்கப்பட்டனர். செல்ல முயன்ற பத்திரிகையாளர்களும் முன்னாள் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரும் தாக்கப்பட்டனர்.

தங்கள் கிராமங்களிலிருந்து விவசாய வேலைக்காக வெளியே வரும் விவசாயிகளைப் போலீசார் கைது செய்கின்றனர். விவசாய சங்கத்தைச் சேர்ந்த முன்னணியாளர்கள் போலீசாராலும் டாடாவின் குண்டர் படைகளாலும் நள்ளிரவில் வீடு புகுந்து தாக்கப்படுகின்றனர். பாலிகோதா கிராமத்தில் அமின் பனாரா என்ற பழங்குடித் தலைவர் நள்ளிரவில் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வட்டாரமெங்கும் பயபீதி நிலவுகிறது. போராட்ட அமைப்பினர், தாங்கள் மாவோயிஸ்டுகள் அல்ல என்றும், தாங்கள் வன்முறைப் பாதையை நம்புவதில்லை என்றும் அறிவித்துள்ள போதிலும், அவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வதைக்கப்படுகிறார்கள்.

கடந்த மே 6-ஆம் தேதியன்று சாந்தியா கிராமத்தில் போலீசு தடியடி நடத்தியது. பழங்குடி மக்களின் வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கியது. இக்கொடுஞ்செயலை எதிர்த்து இவ்வட்டார மக்கள் தர்ணா போராட்டம் நடத்தியபோது, கடந்த மே 12-ஆம் நாளன்று கலிங்கா நகரின் இரு இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. 23-ஆம் பிளாட்டூன் ஆயுதப் போலீசும் மாநிலப் போலீசும் சேர்ந்து ஏறத்தாழ 1500 பேர் கொண்ட போலீசுப் படை குவிக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டுவீச்சு, ரப்பர் தோட்டா துப்பாக்கிச் சூடு என அடுத்தடுத்து தாக்குதல்கள் நடந்தன.

டாடா, போஸ்கோ நிறுவனங்களின் நிலப்பறிப்புக்கு எதிராகப் பிரச்சார ஊர்வலம் நடத்தும் கலிங்காநகர் விவசாயிகள். (கோப்புப் படம்).



லட்சுமண் ஜாமுடா என்ற பழங்குடியின முதியவர் போலீசு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளார். பல பெண்கள் வயிற்றில் 5-6 குண்டுகள் பாய்ந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். 30-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இம்மாவட்டம் முழுவதும் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இவ்வளவு அடக்குமுறைகளையும் மீறி அங்கே மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

போராடுபவர்கள் நக்சல்பாரி தீவிரவாதிகளோ, மாவோயிஸ்டு பயங்கரவாதிகளோ அல்ல. இவர்கள் விவசாயிகள், மீனவர்கள் மற்

www.padippakam.com

றும் பழங்குடியின மக்கள். ஆனாலும், அவர்கள் பயங்கரவாதிகளாகவும் நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானவர்களாகவும் சித்தரிக்கப்பட்டு மிருகத்தனமாக ஒடுக்கப்படுகிறார்கள். பன்னாட்டு நிறுவனங்களும் தரகுப் பெரு முதலாளிகளும் இயற்கை வளங்களைச் சூறையாடுவதற்கு எதிராக யார் நின்றாலும் அவர்களை ஒடுக்குவதுதான் காட்டுவேட்டையின் நோக்கம் என்பதை இதன் மூலம் நாட்டு மக்களுக்கு உணர்த்தி வருகிறது, கொலைகார அரசு.

கலிங்காநகர் மக்களின் போராட்டம் தீவிரமானதும் வலது கம்யூனிஸ்டு கட்சி, இடது கம்யூனிஸ்டு கட்சி, புரட்சி சோசலிஸ்டு கட்சி, பார்வர்டு பிளாக், சமாஜ்வாடி கட்சி, ராஷ்டிரிய ஜனதா தளம் ஆகிய 6 கட்சிகள் இப்போராட்டத்தை ஆதரிக்கின்றன. போஸ்கோ திட்டம் தொடங்கப்பட்டபோது, அதை நாட்டின் வளர்ச்சிக்கான திட்டம் என்று துதிபாடிய இக்கட்சிகள், இப்போது போராட்டம் தீவிரமானதும் அரசியல் ஆதாயத்துக்காக ஒரிசாவின் நவீன் பட்நாயக் அரசைச் சாடி சவடால் அடிக்கின்றன.

வலது கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலரான பரதன், போஸ்கோ திட்டத்தை இப்பகுதியிலிருந்து வெளியேற்றி, ஜெகத்சிங்புர் மாவட்டத்தின் வேறு பகுதியில் அல்லது அருகிலுள்ள பூரி மாவட்டத்தில் தொடங்கலாம் என்கிறார். வேறு பகுதியில் போஸ்கோ திட்டத்தை தொடங்குவதால், அது முற்போக்குத் திட்டமாகிவிடாது. பிரச்சினை, ஆலையை வேறிடத்தில் அமைப்பது அல்ல. சொந்த மண்ணை அந்நியனுக்குத் தாரை வார்க்கும் அயோக்கியத்தனத்துக்கு எதிரானது. அதைத் திசைதிருப்பி கலிங்கா நகர் மக்களின் போராட்டத்தை நீர்த்துப் போக வைக்கும் போலி கம்யூனிஸ்டுகளின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்தி முறியடிப்பதும், நாட்டையும் மக்களையும் சூறையாடும் மறுகாலனியாக்கத்திற்கு எதிரான போராட்டமாக ஒரிசா மக்களின் போஸ்கோ எதிர்ப்புப் போராட்டத்தை வளர்த்தெடுப்பதும்தான் புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் இன்றைய உடனடிக் கடமை.

● குமார்

# நச்சுவாயு தாக்கி 5 தொழிலாளர்கள் பலி! முதலாளித்துவ பயங்கரவாதக் கொடூரம்!

வேலூர் மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி ஜீலானி தோல் தொழிற்சாலையில், கடந்த ஏப்ரல் 30-ஆம் தேதியன்று கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தம் செய்யும்போது நச்சுவாயு தாக்கி சரவணன், சூரியமூர்த்தி, ஏழுமலை, ராமு, சென்றாயன் என ஐந்து கூலித் தொழிலாளர்கள் மாண்டு போயுள்ளனர். இதில் ஏழுமலை, ராமு, சென்றாயன் ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள். அவர்களின் குடும்பம் மட்டுமின்றி, சகோதரர்களான மூவர் கொல்லப்பட்ட துயரத்தால் அவர்கள் வாழ்ந்த செங்கல்வராயன் பட்டறை கிராமமே வேதனையில் விம்மிக் கொண்டிருக்கிறது.

இந்தத் தோல் தொழிற்சாலையில், வாணிடெக் என்ற கழிவுகளை அகற்றும் அரசு சார்பு நிறுவனத்தின் மூலம் கூலித் தொழிலாளர்களை வைத்து ஒப்பந்ததாரர்கள் வேலை வாங்குகின்றனர். கொத்தடிமைத்தனம், எவ்விதப் பாதுகாப்புச் சாதனங்களும் இல்லாமல் கூலித் தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்குவது, அரசோ அல்லது தொழிலாளர் துறையோ இத்தகைய கொடுமைகளைக் கண்டு கொள்ளாமல் புறக்கணிப்பது ஆகியவற்றின் விளைவுதான் இந்தக் கோரச் சாவுகள். அறிவியல் தொழில்நுட்பங்கள் வளர்ந்துள்ள போதிலும், செலவு குறைவானது என்பதால் கூலித் தொழிலாளர்களின் உயிரைப் பணயம் வைத்து வாளிகள் மூலமாக கழிவுகள் அள்ளப்படுகின்றன. கழிவுகளை அள்ளும் முன்பாக அமிலக் கரைசல் ஊற்றுவது, தொழிலாளர்களுக்கு முகமூடிக் கவசம் அணிவிப்பது, மூச்சுத் திணறல் ஏற்பட்டால் உடனடி முதலுதவிக்கான ஏற்பாடுகள் செய்வது முதலான எந்தவொரு பாதுகாப்பு ஏற்பாடுகளும் இங்கு கடைபிடிக்கப்படவில்லை.

நச்சுவாயு தாக்கி மாண்டுபோன சகோதரர்களான ஏழுமலை, ராமு, சென்றாயன் ஆகியோரின் தாய், மனைவியர் மற்றும் குழந்தைகள்.



வாணியம்பாடி, ஆம்பூர், பேர்ணாம்பட்டு, மேல்விசாரம், இராணிப்பேட்டை, வேலூர் ஆகிய பகுதிகளில் உள்ள தோல் தொழிற்சாலைகளில் இது தொடர்நிகழ்வாகி வருகிறது. இரு மாதங்களுக்கு முன்பு ஆம்பூரில் இரு கூலித் தொழிலாளர்கள் நச்சுவாயு தாக்கி மாண்டுபோயுள்ளனர். இத்தகைய முதலாளித்துவப் பயங்கரவாதத்தால்தான் 200 கோடி டாலர் அளவுக்கு தோல் ஏற்றுமதித் தொழில் பெருகியுள்ளது. நடப்பு நிதியாண்டில் இதை 700 கோடி டாலர் அளவுக்கு உயர்த்த தோல் ஏற்றுமதி கவுன்சில் இலக்கு தீர்மானித்துள்ளது. இக்கோரக் கொலைக்கு எதிராகப் பல்வேறு அமைப்புகள் கண்டனம் தெரிவித்த பிறகுதான், தி.மு.க. அரசு மாண்டுபோன தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ. 5 லட்சம் இழப்பீடு வழங்கி, ஆலையை மூட உத்தரவிட்டுள்ளது

நாடு முழுவதும் தொழிலாளர்கள் உரிமைகளற்ற அடிமைகளாக வதைக்கப்படுவதற்கும், பாதுகாப்புச் சாதனங்களின்றி விபத்துகளில் தொழிலாளர்கள் கொல்லப்படுவதற்கும், முதலாளிகளின் இலாபவெறிக்கும் வகைமாதிரிக்கு ஒரு உதாரணம்தான் இக்கோரக் கொலைகள். இம்முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொழிலாளர்களை அணிதிரட்டி அமைப்பாக்க, இப்பகுதியில் இயங்கும் ம.க.இ.க. பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது.

— பு.ஜ.செய்தியாளர்.



படிப்பகம்

www.padippakam.com

# தரகு முதலாளிகள் தயாரித்து வழங்கும் “வளர்ச்சி வேட்டை!”

## காட்டு வேட்டையை எப்படி நடத்த வேண்டும் எனத் தரகு முதலாளிகள் வெளியிட்டுள்ள அறிக்கை, அவர்களின் பேராசையைப் புட்டு வைக்கிறது.

மாவோயிஸ்டுகளை ஒடுக்குவதற்குப் போதிய அதிகாரம் தனக்குத் தரப்படவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார், உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். மாவோயிஸ்டுகளை ஒடுக்காததற்கு மைய அரசுதான் பொறுப்பு என்று பாரதிய ஜனதாவும், சட்டம்-ஒழுங்கு என்பது மாநிலப் பட்டியலில் இருப்பதால், சட்டிஸ்கர் மாநில பா.ஜ.க அரசுதான் பொறுப்பு என்று காங்கிரசும் லாவணி பாடிக்கொண்டிருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் பொறுப்பை நேரடியாகத் தன் கையில் எடுத்துக் கொண்டு, மாவோயிஸ்டுகளை ஒடுக்குவதற்கு அரசு என்ன செய்ய வேண்டும் என்று அரசுக்கு மறைமுகமாக ஆணை பிறப்பித்திருக்கிறது, இந்தியத் தரகு முதலாளிகள் சங்கம் (Federation of Indian Chamber of commerce and Industry) ‘தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கு’க் குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையினையும் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது, அச்சங்கம்.

தனியார்மய - தாராளமயக் கொள்கைகளின் அமலாக்கம், மற்றெல்லா வர்க்கங்களுடைய உரிமைகளையும் பறித்திருப்பதுடன், நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற அறுதி அதிகாரத்தை தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கையில் ஒப்படைத்திருக்கிறது. எந்த ஒரு பிரச்சினையிலும் எஃப்.ஐ.சி.சி.ஐ.; சி.ஐ.ஐ.; அசோசெம் போன்ற இந்தியத் தரகு முதலாளிகள் சங்கங்கள் போடும் தீர்மானங்கள்தான், அமைச்சரவை முடிவுகளாக நிறைவேறும் என்பது எழுதப்படாத விதியாகிவிட்டதால், முதலாளிகள் சங்கம் முக்காட்டை எடுத்துவிட்டு, முழு நிர்வாணமாகக் களத்தில் இறங்கிவிட்டது.

முதலாளிகளின் அறிக்கை என்றால் அது மூர்க்கத்தனமாகத்தான் இருக்குமென்று நாம் எண்ணிவிடக் கூடாது. மாவோயிஸ்டுகளின் செல்வாக்கைத் தடுக்க முடியாத அரசாங்கம் மற்றும் போலீசின் திறமையின்மை, நக்சலைட்டுகள் பெற்றிருக்கின்ற விரிவான மக்கள் ஆதரவு, அந்நிய சக்திகளிடமிருந்து இந்தியா எதிர்கொள்ளும் அபாயத்தைக் காட்டிலும், இந்த ‘உள்நாட்டு அபாயம்’ மிகவும் சிக்கலானதாகவும், கையாள்வதற்குக் கடினமானதாகவும் இருப்பது ஆகியவை பற்றியெல்லாம் விளக்கி விட்டு, இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பதையும் முதலாளிகள் சங்கத்தின் அறிக்கை விவரிக்கிறது.

‘‘பழங்குடி மக்கள் பகுதிகளில் வளர்ச்சியைக் கொண்டுவராமல் நீண்டகாலமாக நாம் புறக்கணித்து விட்டோம். கிராமப் பொருளாதாரத்தைப் புறக்கணித்து விவசாயத்தை அழிய விட்டுவிட்டோம். வேலையின்மை, வறுமை, ஏழைகளின் மீதான கொடூரச் சுரண்டல், நிலப்பிரபுக்கள்-கந்துவட்டிக்காரர்களின் சுரண்டல்-ஆதிக்கம், அதிகாரிகளின் ஊழல்.. எல்லாம் சேர்ந்து மக்களை மாவோயிஸ்டுகள் பக்கம் தள்ளிவிட்டது. நக்சல் எதிர்ப்பு என்ற பெயரில் அப்பாவி கிராம மக்கள் மீது அரசுப் படைகள் செலுத்திய வன்முறை மக்களை மேலும் அந்நியப்படுத்தி விட்டது’’.... என்று கூறுகிறது அறிக்கை.



சட்டிஸ்கர் அரசு உருவாக்கிய சல்வாஜூடும் என்ற கூலிப்படையால், தமது கிராமங்களில் இருந்து துரத்தப்பட்டு, அகதி முகாம்களில் கட்டாயமாகத் தங்க வைக்கப்பட்டுள்ள பழங்குடியின மக்கள். (கோப்புப் படம்)

வளர்ச்சித் திட்டங்களின் பெயரால் தாங்கள் வெளியேற்றப்படுவதையும், இயற்கை வளங்களை வெகு சிலரே அபகரித்துக் கொள்வதையும் கண்டு கிராமப்புற விவசாயிகள் கொண்டிருக்கும் கோபம், சுரங்கக் கம்பெனிகளால் சூழல் அழிக்கப்படுவது கண்டு பழங்குடி மக்களுக்கு ஏற்படும் அச்சம் ஆகியவை குறித்தெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

**கனிம வளம் செறிந்த 640 கிராமங்களை டாடா, மித்தலின் விருந்து மேசையில் பரிமாறியிருக்கிறது, சல்வாஜுடும் என்ற அரசாங்கத்தின் கூலிப்படை.**

இந்த அறிக்கை பேசுகிறது. காந்தி கனவு கண்ட 'தர்ம கர்த்தா முதலாளிகள்' உண்மையிலேயே தோன்றி விட்டார்களோ, இதுதான் முதலாளி வர்க்கத்தின் மனம் திறந்த சுயவிமரிசனமோ என்று படிப்பவர்களை மயக்கு கிறது அறிக்கை. ஆனால், அடுத்து வரும் வரிகளே படிப் பவர்களின் மயக்கத்தைத் தெளிவித்து விடுகின்றன.

மாவோயிஸ்டுகளுடனான போரை ''இந்தியாவின் இதயத்தில் நடைபெறும் போர்'' என்று வருணிக்கிறது இந்த அறிக்கை. எங்கேயோ கேட்ட சொற்றொடர் போல இல்லை? சிதம்பரத்தின் 'காட்டு வேட்டை' நடவடிக்கையை, ''இந்தியாவின் இதயத்தின் மீதான போர்'' என்று குறிப்பிட்டு, போரை நிறுத்த வேண்டும் என்று எழுதினார், அருந்ததி ராய். 'போரை முடுக்கி விட வேண்டும்' என்கிறது முதலாளிகள் சங்கத்தின் அறிக்கை - அவ்வளவுதான் வித்தியாசம்.


''நக்சலைட் நடவடிக்கைகளின் மையமான சட்டிஸ் கரில் இந்தியாவின் இரும்புத் தாதுவளத்தில் 23% உள்ளது. ஏராளமான நிலக்கரி உள்ளது... தனது தொழில் துறை உற்பத்தியை முடுக்கி விட்டு, வளர்ச்சிப் பாதை யில் பீடு நடை போடவேண்டிய தருணத்தில், வெளி நாட்டு நிறுவனங்களும் விருந்துக்கு வந்திருக்கும் தரு ணத்தில், இந்தியாவின் நீண்டகால வெற் றிக்கு அத்தியாவசியமானவையான கனிம நிறுவனங்கள் மற்றும் இரும்பு ஆலை களை நக்சலைட்டுகள் எதிர்க்கிறார்கள்'' என்று கூறிவிட்டு, இந்த விருந்தில் பங் கேற்கும் நிறுவனங்களையும் அறிக்கை பட்டியலிடுகிறது.

டாடா ஸ்டீல், ஆர்செலார் மித்தல், டி பியர்ஸ், பி.எச்.பி பில்லிடன், ரியோ டின்டோ ஆகிய நிறுவனங்கள் சட்டிஸ்கர் அரசுடன் பல்லாயிரம் கோடிக்கு ஒப்பந் தங்கள் போட்டிருக்கின்றன என்றும், இவர்களுக்குச் சுரங்கம் தோண்டும் எந்தி ரங்களை விற்பதற்கு அமெரிக்காவின் கார்ட்டர் பில்லர் போன்ற நிறுவனங்கள் காத்திருக்கின்றன என்றும் கூறிக் குமுறு கிறது.

காடுகள், விளைநிலங்கள், சுரங்கங்கள், துறைமுகங் கள், விமான நிலையங்கள், தொலைபேசி வலைப்பின் னல்கள், ஆறுவழிச் சாலைகள், ஆறுகள், ஏரிகள், எண் ணெய்க் கிணறுகள் முதலான பொதுச் சொத்துகள் அனைத்தும் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறு வனங்களுக்கும் தாரை வார்க்கப்படுவதையும், மலிவான கச்சாப்பொருள், உழைப்பு, மின்சாரம், வரி விலக்குகள், சலுகைகள், ஊக்கத்தொகைகள், கடன்கள் என வாரி வழங்கப்படுவதையும், சுற்றுச்சூழல் விதிகள் முதல் தொழிலாளர் சட்டங்கள் வரையிலான அனைத்தும் தளர்த்தப்படுவதையும், இவற்றின் விளைவாக உலகப் பணக்காரர்கள் பட்டியலில் இந்தியத் தரகுமுதலாளி களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருவதை யும் சாத்தியமாக்கியிருக்கின்ற இந்த 'வளர்ச்சி' என்பது, தங்களுக்கான விருந்துதான் என்பதைத் தரகு முதலாளி கள் சங்கத்தின் அறிக்கை வெளிப்படையாகவே சொல்லிவிட்டது!

தங்களுடைய இந்த வளர்ச்சியுடன் இந்தியாவின் 'தேசிய நலன்' எங்ஙனம் பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதையும் அறிக்கை விளக்குகிறது. ''இந்தியாவின் நகர்ப்புறங்களைச் சேர்ந்த வசதி படைத்த நுகர்வோர் கார் கள், வீடுகள், வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகிய வற்றை வாங்கத் தொடங்கிவிட்டனர். சாலைகளும் பாலங்களும் ரயில் பாதைகளும் தரமாக இருக்கவேண் டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். உற்பத்தியைப் பெருக்கி நுகர்வோரின் தாகத்தைத் தணிப்பதற்கு, மிகப் பெரிய அளவில் சிமெண்டு, இரும்பு, மின்சாரம் போன் றவை நமது நாட்டுக்குத் தேவைப்படுகின்றன. இந்தத் தேசிய சவாலைச் சமாளிப்பதற்கு ஏற்ற வகையில் சமூகப் பொருளாதாரச் சூழலை மாற்றியமைக்க வேண் டியிருக்கிறது''

ஆடம்பரக் கார்களுக்கும் ஆறுவழிச் சாலைகளுக்கும் ஏற்ப சமூகப் பொருளாதாரச் சூழலை மாற்றியமைக்கும் இந்தத் திட்டம் சட்டிஸ்கரில் எப்படி நிறைவேறிக் கொண்டிருக்கிறது?





படிப்பகம்

''640 கிராமங்கள் காலியாகி விட்டன. டன் கணக்கிலான இரும்புத் தாதுவின் மீது அமர்ந்திருக்கும் கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, அவை ஏலம் விடப்படுவதற்குக் காத்திருக்கின்றன. எஸ்ஸார் ஸ்டீல், டாடா ஸ்டீல் ஆகிய நிறுவனங்கள் இங்கே சுரங்கம் தோண்ட இருப்பதாக செய்திகள் உலவுகின்றன... கொலம்பஸ் நடத்திய ஆக்கிரமிப்புக்குப் பிறகு, பழங்குடி மக்களின் நிலத்தின் மீது நடத்தப்படும் மிகப் பெரிய ஆக்கிரமிப்பு இதுவாகத்தான் இருக்கும்.'' - இவை மத்திய ஊரக வளர்ச்சித் துறை நியமித்த ஆய்வுக்குழு அக்டோபர் 2009-இல் வெளியிட்ட அறிக்கையில் காணப்படும் வாசகங்கள். கிராமங்களுக்குத் தீவைத்து, பெண்களை வல்லுறவுக்கு ஆளாக்கி, இளைஞர்களைக் கொன்று, தண்டேவாடா மாவட்டத்தின் மக்கட்தொகையில் பாதிப்பேரை (3.5 இலட்சம் பழங்குடி மக்கள்) அடித்து விரட்டி, கனிம வளம் செறிந்த 640 கிராமங்களை டாடா, மித்தலின் விருந்து மேசையில் பரிமாறியிருக்கிறது, சல்வாஜுடும் என்ற அரசாங்கத்தின் கூலிப்படை.

''சுரங்கம் தோண்டாவிட்டால் அரசாங்கத்துக்கு பணம் கிடைக்காது. பணம் இல்லாவிட்டால், உங்களுக்குப் பள்ளிக்கூடமும் கல்வியும் எப்படிக் கிடைக்கும்? டெல்லியைப் பாருங்கள். தெருக்களையும் கட்டிடங்களையும் பாருங்கள். நீங்கள் இப்படி வாழ விரும்பவில்லையா? உங்கள் பிள்ளைகளை டாக்டராக்கவும் வக்கீலாக்கவும் விரும்பவில்லையா?'' என்று சமீபத்தில் சட்டிஸ்கர் பழங்குடி மக்களிடம் விசாரணை நடத்திய 'இண்டிபென்டெட் பீப்பிள்ஸ் டிரிப்யூனல்' என்ற அமைப்பு கேள்வி எழுப்பியது. ''தேசிய கனிம வளக் கழகம் 30 ஆண்டுகளாக பைலதில்லா சுரங்கத்தில் இரும்பு எடுத்துக் கொண்டிருக்கிறது. முதலில் சுரங்கம் வரட்டும். அடுத்தடுத்து உங்களுக்கு எல்லா வசதிகளும் வரும் என்றுதான் அப்போதும் சொன்னார்கள். இதுவரை எங்களுக்கு எதுவும் வரவில்லை. அரசாங்கமே எங்களுக்கு எதுவும் செய்யாதபோது, முதலாளிகள் செய்வார்கள் என்று எப்படி நம்பமுடியும்?'' என்று திருப்பிக் கேட்டார்கள், பழங்குடி மக்களின் பிரதிநிதிகள்.

> ''பைலதில்லா சுரங்கத்தை நடத்தும் அரசாங்கமே எங்களுக்கு எதுவும் செய்யாதபோது, தனியார் சுரங்க முதலாளிகள் செய்வார்கள் என்று எப்படி நம்பமுடியும்?'' என்று கேட்கிறார்கள், பழங்குடி மக்களின் பிரதிநிதிகள்.

பழங்குடி மக்களிடம் நிலவும் அதிருப்தியும் கோபமும் 'தர்மகர்த்தா' தரகு முதலாளிகளுக்குப் புரியாமல் இல்லை. பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வு காண்பதைக் காட்டிலும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் தீர்வு காண்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

பொருளாதார வளர்ச்சியைத் தீவிரப்படுத்துதல், நிர்வாகத்திலும் வளர்ச்சித் திட்டங்களிலும் மக்களை ஈடுபடுத்துதல், பாதுகாப்பு, ஊடகக் கொள்கைகள் ஆகியவற்றில் மத்திய-மாநில அரசுகள் உடனே கவனம் செலுத்துதல்; வேலைவாய்ப்பு, நிலச்சீர்திருத்தம் மற்றும் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, பழங்குடி மக்கள் பகுதிகளை அதிரடியாக முன்னேற்றுதல் - இவைதான் தரகுமுதலாளிகள் சங்கத்தின் அறிக்கை பரிந்துரைக்கும் தீர்வுகள்.

'வெட்டு, குத்து, கொலை, சிறை, இரத்தம்' போன்ற எந்த விதமான கெட்ட வார்த்தைகளோ, கவுச்சி வாடையோ இல்லாமல், நல்ல வார்த்தைகளால் நிரம்பியிருக்கும் இந்த ஆலோசனைகளுக்கு அருஞ்சொற்பொருள் விளக்கம் இதுதான்: 'பொருளாதார வளர்ச்சியை தீவிரப்படுத்துதல்' - மொத்த மாநிலத்தையும் குடைந்து பள்ளமாக்க தரகு முதலாளிகளுடன் ஒப்பந்தம் போடுதல்; 'நிர்வாகத்திலும் வளர்ச்சித்திட்டங்களிலும் மக்

தொடர்ச்சி 34-ஆம் பக்கம்

தண்டேவாடாவில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோதக் கூலிப்படையான சல்வாஜுடுமின் ஆயுதப் பயிற்சி முகாம். (கோப்புப் படம்)





படிப்பகம்

# மாவோயிஸ்டு வேட்டையா? பழங்குடியின வேட்டையா?

**லால்கார் பகுதியில் நடத்தப்படும் காட்டு வேட்டை, சி.பி.எம்., சமூகப் பாசிஸ்டுகளாகச் சீரழிந்து போவதைக் காட்டுகிறது.**

மேற்கு வங்கத்தில், லால்கார் வட்டாரத்தின் காடுகளையும் கனிம வளங்களையும் சூறையாடக் கிளம்பியுள்ள தரகுப் பெருமுதலாளித்துவ ஜிந்தால் நிறுவனத்தின் தொழிற்சாலை ஒன்றுக்கு அடிக்கல் நாட்ட, கடந்த 2008 நவம்பரில் மத்திய அமைச்சர் பாஸ்வான், மே.வங்க முதல்வர் புத்ததேவ் ஆகியோர் சென்று கொண்டிருந்த போது, லால்கார் பகுதியில் மாவோயிஸ்டுகள் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் யாரும் பாதிக்கப்படவில்லை என்றாலும், உடனடியாக மே.வங்க போலீசின் தேடுதல் வேட்டை ஆரம்பமானது. லால்கார் வட்டாரத்தின் காடுகளில் வசித்து வரும் பழங்குடியினரைப் பிடித்து மாவோயிஸ்டு பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி, சித்திரவதை செய்யத் தொடங்கியது மே.வங்க போலீசு. போலீசு அடக்குமுறைக்கு எதிராக லால்கார் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடி, 'இடது சாரி' அரசின் யோக்கியதையை நாடறியச் செய்தனர். இப்போராட்டத்தில் மாவோயிஸ்டுகள் தலையிட்டு, அதைப் போர்க்குணமிக்கப் போராட்டமாக முன்னெடுத்துச் சென்றனர்.

அதன் பிறகு, மாநில அரசுப் படைகளும் மத்திய படைகளும் கூட்டுச் சேர்ந்து லால்காரில் பயங்கரவாத அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டன. அங்குள்ள பழங்குடியினரின் வீடுகளையும் உடைமைகளையும் தாக்கி, அவர்கள் மீது பல்வேறு பொய்வழக்குகளைப் போட்டு மே.வங்க அரசு வதைக்கத் தொடங்கியது. மாவோயிஸ்டுகள் அப்பகுதியிலிருந்து பின்வாங்கத் தொடங்கினர். லால்கார் மக்களின் போராட்டத்தைத் தலைமை தாங்கி வழிநடத்திய போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டியின் தலைவர்களுள் ஒருவரான சத்ரதார் மஹடோ, மாவோயிஸ்டு பயங்கரவாதியாகச் சித்தரிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார். மற்றொரு தலைவரான லால்மோகன் டுடு போலீசாரால் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். போராட்டக் கமிட்டியின் முன்னணியாளர்களும் பழங்குடியின ஆண்களும் காடுகளில் தலைமறைவாகினர்.

தற்போது காட்டு வேட்டை எனும் பெயரில் நக்சல்பாரிப் புரட்சியாளர்களுக்கெதிராக நரவேட்டை ஆரம்பமானதைத் தொடர்ந்து, போலீசின் அடக்குமுறை மேலும் தீவிரமாகியுள்ளது. லால்கார் போன்ற காட்டுப் பகுதிகளில் வசிப்பவர்கள், சுள்ளி பொறுக்கவும், தேனெடுக்கவும் காட்டுக்குள் செல்லும்போது, பாதுகாப்பிற்காக எடுத்துச் செல்லும் வில், அம்பு, கோடரி போன்ற கருவிகளைக் கைப்பற்றி, அவர்கள் 'பயங்கரமான' ஆயுதங்களை வைத்திருந்ததாகச் சொல்லி போலீசு சிறைப்படுத்துகிறது. அவர்களின் நடமாட்டம் தடுக்கப்பட்டு எந்நேரமும் சோதனைக்கு ஆளாகின்றனர்; கைது செய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்படுகின்றனர்.



போலி கம்யூனிச மே.வங்க அரசின் பயங்கரவாதம்: மாவோயிஸ்டு பயங்கரவாதி என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டு சுனில் மகதோ சிறையில் வதைபட, கைக்குழந்தைகளுடன் தத்தளிக்கும் அவரது மனைவி தீபாலி.

இப்பகுதியில் மாவோயிஸ்டுகள் மறைந்திருந்து கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினால், தங்களது ஆத்திரத்தை அப்பகுதி மக்கள் மீதுதான் காட்டுகிறது, போலீசு. இதனால் குண்டு வெடித்த இடத்திற்கு அருகில்



படிப்பகம்

வசிக்கும் மக்கள் காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்கின்றனர். சாதாரண மக்களை ஏன் இவ்வாறு கொடுமைப் படுத்துகிறீர்கள் எனக் கேட்டால், ''பார்த்தவுடன் கண்டு பிடிக்க மாவோயிஸ்டுகள் தலையில் கொம்பா இருக்கிறது? அதனால் சந்தேகப்படும் எல்லோரையும் சோதிக்கத்தான் வேண்டி இருக்கிறது'' என்று திமிரோடு இந்த அடக்குமுறையை நியாயப்படுத்துகிறார், லால்கார் பகுதியின் போலீசு அதிகாரி.

கடந்த ஆண்டு டிசம்பரில், பிரகதா எனும் இடத்தில் போலீசு வாகனமொன்று மாவோயிஸ்டுகளால் தகர்க்கப்பட்டது. தாக்குதல் நடந்த இடத்தினருகே வசித்து வந்த சுனில் மஹதோ, போலீசு அடக்குமுறைக்குப் பயந்து காட்டுக்குள் ஓடி ஒளிந்தார். ஆனால் போலீசோ, தலைமறைவாகிய சுனில்தான் முக்கிய குற்றவாளி என முத்திரை குத்தியது. சுனிலைச் சரணடையச் செய்ய, அவரது மனைவியையும் குழந்தைகளையும் போலீசார் பிடித்துச் சென்றனர். தற்போது போலீசில் சரணடைந்துள்ள சுனிலோ, ''நான் நிச்சயமாக மாவோயிஸ்டு இல்லை'' என்று போலீசின் சித்திரவதைக் கொடுமைக்கு நடுவே விம்முகிறார்.

முதல் தகவல் அறிக்கையில் சுனிலோடு சேர்க்கப்பட்ட அவரது மனைவி தீபாலியுடன் சேர்த்து, அவருடைய நான்கு குழந்தைகளும் சிறைச்சாலைக்குச் சென்றன. மூத்த குழந்தைக்கு எட்டு வயது என்றால், கடைக்குட்டிக்கோ ஒரு வயதுதான். சுனில் பிடிபட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள தீபாலி, ''இந்த நாலு குழந்தைகளையும் வைத்துக்கொண்டு நான் எப்படி மாவோயிஸ்டு போராளியாக மாறமுடியும்?'' என்கிறார்.

''யாரும் உதவமாட்டீர்களா? ஏனென்று கேட்க எங்களுக்கு யாரும் இல்லையா?'' எனக் கையறு நிலையில் சிறைக்கொட்டடியில் அழுது புலம்பும் சுனில் மஹதோ மீது, அரசுக்கு எதிராகச் சதி செய்தல், வெடி பொருட்கள் மற்றும் பயங்கர ஆயுதங்களைக் கையாளுதல் முதலான 7 பொய்வழக்குகளை போலீசு போட்டிருக்கிறது. அப்பகுதியில் கிட்டத்தட்ட அனைவருமே சுனிலைப் போலவே குற்றம் சாட்டப்பட்டு, போலீசின் அடி-உதைக்குப் பயந்து காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டிருக்கின்றனர்.

சுனில் வசித்து வந்த கிராமத்தில் தேநீர்க் கடை வைத்திருந்த சச்சின் மஹதோ, இப்போது இருப்பதோ சிறைக் கம்பிகளுக்குப் பின்னால். நோஞ்சானாக நோய் வாய்ப்பட்டுக் கிடந்த அவரின் முடியைக் கொத்தாகப் பிடித்துலுக்கி, தரதரவென இழுத்துச் சென்று தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு அடித்து நொறுக்கி மாவோயிஸ்டு என அவரை போலீசு ஒத்துக் கொள்ள வைத்துள்ளது. மாவோயிஸ்டுத் தலைவர் கிசன்ஜியைத் தெரியுமா எனக் கேட்டு நாள் முழுக்க அவர் தொடர்ந்து வதைக்கப்படுகிறார்.

சுனில் மஹதோவைப் போன்று குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஒருவர் கூட, இதுவரை நீதிமன்றத்தில் குற்றவாளி என நிரூபிக்கப்படவில்லை. இவ்வாறு 'மாவோயிஸ்டு' அடையாளமிடப்பட்டு மேற்கு மித்னாபூர் சிறையில் மட்டும் பெண்கள் உட்பட 141 பேர் அடைக்கப்பட்டுள்ளனர்.

**சட்டிஸ்கரிலாவது தனியாக கிரிமினல்களைக் கொண்டு சல்வாஜுடும் எனும் பயங்கரவாத குண்டர் படையைக் கட்ட வேண்டி இருந்தது. ஆனால் மே.வங்கத்திலோ, சி.பி.எம். கட்சி ஊழியர்களே போலீசின் ஆள்காட்டிகளாகவும் அடியாட்களாகவும் செயல்படுகின்றனர்.**

பெல்பஹாரி எனும் இடத்தை சேர்ந்த பாரோ சிங் எனும் ஏழைப் பழங்குடியினப் பெண்ணிற்கும் மாவோயிஸ்டுக்கும் எந்த விதமான நேரடித் தொடர்பும் இல்லை. இருப்பினும், அவர் தண்டிக்கப்பட்டிருக்கிறார். அவரது கணவரைத் தேடி, அடிக்கடி இரவில் அவரது வீட்டைப் போலீசார் சோதனை செய்தனர். போலீசு வேட்டையிலிருந்து தப்பிக்க அவரது கணவர் காட்டுக்குள் தலைமறைவாகிவிட்டார். அவரைப் பற்றி பாரோவிடம் போலீசு தொடர்ந்து விசாரித்து, சித்திரவதை செய்து கொண்டே இருந்தது. ஒரு நாள் இரவில் அடக்குமுறைக்கு அஞ்சி வீட்டிலிருந்து ஓட முயன்ற பாரோவின் காலில் போலீசார் பலமாகத் தாக்கினர். மயக்கம் அடைந்து விழுந்த அவர், சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மாவோயிஸ்டு பயங்கரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்டு விட்டார்.

இவை எல்லாம் மே.வங்கப் போலீசின் தேடுதல் வேட்டையில் மெதுவாகக் கசிந்துள்ள சில செய்திகள் மட்டும்தான். இன்னும் வெளிவராத போலீசு அட்டூழியங்கள் ஏராளம். சட்டிஸ்கரிலாவது தனியாக கிரிமினல்களைக் கொண்டு சல்வாஜுடும் எனும் பயங்கரவாத குண்டர் படையைக் கட்ட வேண்டி இருந்தது. ஆனால் மே.வங்கத்திலோ, சி.பி.எம். கட்சி ஊழியர்களே இப்பகுதியில் போலீசின் ஆள்காட்டிகளாகவும் அடியாட்களாகவும் செயல்படுகின்றனர். ஏகாதிபத்திய நிறுவனங்களின் நலனுக்காக சொந்த நாட்டு மக்களையே வதைக்கும் சமூக பாசிஸ்டுகளாக சி.பி.எம். கட்சியும் ஆட்சியும் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. உலகமயத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருவதிலும், அதனை எதிர்த்துப் போராடுபவர்களை ஒடுக்குவதிலும் போலி கம்யூனிஸ்டு அரசுக்கும், பிற கட்சிகள் ஆளும் மாநில அரசுகளுக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் கிடையாது என்பதையே மே.வங்கத்தில் தொடரும் போலீசு பயங்கரவாதம் நிரூபித்துக் காட்டுகிறது.

● கதிர்



படிப்பகம்

## “நீங்கள் எங்களோடு இல்லையென்றால்...”

# அறிவுத்துறையினருக்கு எதிராக ப.சி.யின் பகிரங்க மிரட்டல்

### அரசின் செயல்பாடுகளை எதிர்க்கும் அனைவரும் மாவோயிஸ்டு பயங்கரவாதிகளென முத்திரை குத்தப்படுகின்றனர்.

**கா**ட்டுவேட்டை எனப்படும் உள்நாட்டுப் போரை நிறுத்தவும் அமைதி மற்றும் நீதிக்கான பேச்சுவார்த்தை நடத்தவும் கோரி பேரணி நடத்துவதற்காக கடந்த மே 5-ஆம் தேதியன்று, ராய்ப்பூரிலிருந்து தண்டேவாடாவுக்கு பிரபல காந்தியவாதியான நாராயண் தேசாய், விண்வெளி அறிவியலாளர் யஷ்பால், முன்னாள் யு.ஜி.சி தலைவர் ராம்ஜி சிங், சுவாமி அக்னிவேஷ் முதலானோர் வந்தனர். அமைதிப் பேரணி நடத்த முற்பட்ட அவர்கள் ஒரு பொறுக்கி கும்பலால் முற்றுகையிடப்பட்டனர்.

பா.ஜ.க மற்றும் காங்கிரசைச் சேர்ந்த ஆதிக்க சாதி வியாபாரிகள் ஏற்பாடு செய்து அழைத்து வந்த அப்பொறுக்கிகள் ஆபாசமான வசவுகளுடன், இவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். இக்கும்பலைப் புகைப்படம் எடுக்க முற்பட்ட பத்திரிகையாளரைத் தாக்கியது. ராய்ப்பூரிலிருந்து ஊர்வலத்துக்கு வந்தவர்கள், வாடகைக்கு எடுத்து வந்திருந்த பேருந்தின் டயர்களை நாசப்படுத்தி பஞ்சராக்கியது. போலீசு முன்னிலையிலேயே இவையனைத்தும் நடந்த போதிலும், போலீசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கைகட்டி நின்றது. அமைதிப் பேரணி நடத்த முற்பட்ட அறிவுத்துறையினர், போலீசாரால் கௌரவமாகத் திருப்பியனுப்பப்பட்டனர்.

பஞ்சாபில் இந்திய மக்கள் ஜனநாயக முன்னணி என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான டாக்டர் தர்ஷண்பால் கடந்த ஏப்ரலில் கைது செய்யப்பட்டுள்ளார். தர்ஷண்பாலை விசாரணை என்ற பெயரில் அடைத்து போலீசு சித்திரவதை செய்து வருகிறது. காரணம், இவர் கைது செய்யப்பட்ட மாவோயிஸ்டுத் தலைவர் கோபாட் காந்தியுடன் தொடர்புடையவர் என்றும், அவரது தீவிரவாத நடவடிக்கைகளுக்கு உதவினார் என்றும் கூறிவரும் போலீசு, அவர் மீது பல பொய்வழக்குகளைச் சோடித்துள்ளது. இதே போல, சுர்ஜித் சிங் பூல் என்ற விவசாய சங்கத் தலைவரும் மாவோயிஸ்டு தீவிரவாதி என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் 4-ஆம் தேதியன்று டெல்லி போலீசாரும் ஆந்திர சிறப்பு உளவுத்துறை போலீசாரும் சேர்ந்து டெல்லி பல்கலைக்கழகத்தின் தயாள்சிங் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் சுனில் மண்டிவால் என்பவரைக் கைது செய்துள்ளனர். பயங்கரவாத ‘‘ஊபா’’ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள மாவோயிஸ்டு தலைவரான கோபாட் காந்தியுடன் தொடர்புடையவர் என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டு இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜார்கண்டு மாநிலத்தைச் சேர்ந்த மனித உரிமை இயக்கச் செயல்வீரரான கிலாட்சன் டங்டங் என்பவர், உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின் பேரில் உளவுத்துறை போலீசாரால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார். பழங்குடியினரின் நிலங்களைப் பறித்து மிட்டல் நிறுவனம் எஃகு ஆலை நிறுவுவதை எதிர்ப்பதாலேயே, இவர் மாவோயிஸ்டு ஆதரவாளர் என்று குற்றம் சாட்டப்பட்டு மிரட்டப்படுகிறார். இவர் மட்டுமல்ல, நாடெங்கும் மனித உரிமை - ஜனநாயக உரிமைக்கான அமைப்புகள், கலை - இலக்கிய அமைப்புகள் உள்ளிட்டு உழைக்கும் மக்களிடம் செயல்பட்டுவரும் 57 அமைப்புகள் உளவுத்துறையின் கண்காணிப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன.



மாவோயிஸ்டு பயங்கரவாதி என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, ‘‘ஊபா’’ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர் தோழர் கோபால் மிஸ்ரா.



படிப்பகம்

மே.வங்கத்தில் பங்ளார் மனாப் அதிகார் சுரக்ஷா மன்ச்சா (MASUM) என்ற விவசாய சங்கத்தின் செயலாளரான கீர்த்தி ராய், பயங்கரவாத தடுப்புப் போலீசாரால் கடந்த ஏப்ரல் 7-ஆம் தேதி யன்று கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கடந்த 2008-ஆம் ஆண்டில் சித்திரவதைக்கு எதிரான மக்கள் நீதிமன்றத்தை ஒழுங்கமைத்து நடத்தினார். இதில் போலீசு சித்திரவதையால் பாதிக்கப்பட்ட 1200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இந்த அமைப்பின் இதர முன்னணியாளர்கள் மீதும் பொய்வழக்குகள் பதிவாகியுள்ளன.



அரசை எதிர்க்கும் அறிவுத்துறையினரை மாவோயிஸ்டுகளென முத்திரை குத்தி, அவர்கள் மீது ''ஊபா''சட்டத்தை ஏவிவிடுகிறார், ப.சிதம்பரம்.

குஜராத்தின் டாங் மாவட்டத்தில், டாங்கி மஸ்தூர் யூனியன் எனும் தொழிற்சங்கத்தின் முன்னணியாளர்களான அவினாஷ் குல்கர்னி, பாரத் பவார் ஆகியோர் கடந்த மார்ச் மாதத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சங்கம், ஆதிவாசி மகாசபை எனும் பல்வேறு பழங்குடி மக்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் உறுப்பு சங்கமாகும். தெற்கு குஜராத்தில் நக்சல் தீவிரவாதம் அதிகரித்து விட்டதாகப் பூச்சாண்டி காட்டி, இவர்கள் மாவோயிஸ்டு பயங்கரவாதத்தை ஆதரிப்பதாக பொய்வழக்கு சோடிக்கப்பட்டுள்ளது. இக்கைதுகளைக் கண்டித்து கடந்த மார்ச் 25-ஆம் நாளன்று எதிர்க்கட்சியான காங்கிரசு சட்டமன்றத்தில் வெளிநடப்பு செய்துள்ளது.

அசாமில், கிரிஷாக் முக்தி சங்கராம் சமிதி என்ற பழங்குடியின மக்களின் சங்கம் கடந்த மார்ச் 30-ஆம் தேதியன்று வன உரிமைக்காகவும், ரேஷன் பொருட்களை முறையாக விநியோகிக்கக் கோரியும் தேமாஜி நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி, தடியடித் தாக்குதல் நடத்தி, இப்போராட்டத்தை போலீசு ஒடுக்கியது. இச்சங்கத்தின் தலைவர்களுள் ஒருவரான அகில் கோகய், கைது செய்யப்பட்டுள்ளார். மாவோயிஸ்டு பயங்கரவாதி என்று அவர் மீது பொய்வழக்கு சோடிக்கப்பட்டுள்ளது.

டெல்லி மற்றும் நொய்டா பகுதியிலுள்ள தொழிலாளர்களை அணிதிரட்டி பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்துள்ள டெல்லியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவரான கோபால் மிஸ்ராவும் அவரது மனைவி அனுவும், பயங்கரவாத மாவோயிஸ்டு தலைவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, கடந்த ஏப்ரல் 25-ஆம் தேதியன்று ''ஊபா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். டெல்லி ஓக்லா தொழிற்பேட்டையிலுள்ள தோல் பதனிடும் தொழிலாளர்களிடம் பணியாற்றி வந்தவர்கள்தான் இவர்கள். ஜாதவபூர் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற கோபால் மிஸ்ரா, தனது வாழ்வை ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவே அர்ப்பணித்தவர்.

கர்நாடகத்தில் ராகுல் பெலாகலி என்ற செய்தியாளர், கடந்த ஆண்டில் மாவோயிஸ்டு கட்சியின் மாநிலத் தலைவர்களிடம் பேட்டி எடுத்து பிரஜா வாணி என்ற நாளேட்டில் வெளியிட்டார். இச்செய்தி பற்றி இதுவரை கண்டு கொள்ளாத போலீசு, இப்போது காட்டுவேட்டை தொடங்கியதும் அச் செய்தியாளர் மீது வழக்கு தொடுத்துள்ளது. மாவோயிஸ்டு தலைவரை எங்கே சந்தித்தார் என்ற தகவல் தேவைப்படுவதால், அவர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும், இல்லையெனில் அவர் மீது ''ஊபா'' சட்டம் பாயும் என்றும் ஷிமோகா மாவட்டப் போலீசு அவருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இக்கைதுகள் ஒருபுறமிருக்க, மாவோயிஸ்டுகளை ஆதரிப்போர் ''ஊபா'' சட்டப்படி பத்தாண்டுகள் சிறையிலடைக்கப்படுவார்கள் என்று உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவளிப்பவர் என்று எதை வைத்து தீர்மானிப்பது என்று கேள்வி எழுப்பும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள், அரசுக்கு எதிராகப் போராடுவோரையும் மனித உரிமை இயக்கத்தினரையும் ஜனநாயக சக்திகளையும் கைது செய்து முடக்கும் நோக்கத்துடன்தான் இந்த அறிவிப்பை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது என்பதை அம்பலப்படுத்தி வருகின்றன. மனித உரிமை இயக்கத்தினர், எழுத்தாளர்கள், கலைஞர்கள், வழக்குரைஞர்கள், கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள் என அறிவுத்துறையினர் அனைவரையும் மிரட்டிப் பணியவைக்கும் நோக்கத்துடன் இந்த அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது.

அறிவுத்துறையினர் ஆதரவு தருவதாலேயே மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போரை முன்னெடுத்துச் செல்ல இயலவில்லை என்கிறார் ப.சிதம்பரம். அதனாலேயே அறிவுத்துறையினரின் வாயை அடைத்து முடக்கிவிட பயங்கரவாத ''ஊபா'' சட்டம் ஏவிவிடப்படுகிறது. இந்தப் போர் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான, நக்சல்பாரிகளுக்கு எதிரான போர் மட்டுமல்ல; இது நாட்டு மக்களுக்கு எதிரான போர் என்பதைத்தான் இந்தக் கைது நடவடிக்கைகள் நிரூபிக்கின்றன.

● குணசேகரன்

www.padippakam.com

# “மக்களின் வாழ்வாதாரங்களைப் பிடுங்கி, இயற்கை வளங்களைச் சூறையாடுவது உலகெங்கும் புரட்சியைப் பெற்றெடுக்கிறது!”

## - நிகராகுவா நாட்டு மனித உரிமைப் போராளி பியாங்கா ஜாக்கருடன் ஒரு நேர்காணல்.

**பியாங்கா ஜாக்கர், மத்திய அமெரிக்காவின் நிகராகுவா நாட்டில் பிறந்தவர். உலகின் பிரபல ராக் இசைக் கலைஞர் மைக் ஜாக்கரின் மனைவி. கடந்த 30 ஆண்டுகளாக மனித உரிமைகளுக்காகப் போராடி வரும் ஆர்வலர். ஐரோப்பிய நாடுகளுக்கான நட்புத் தூதுவராகவும் பணியாற்றி வருகிறார். இந்தியாவின் ஒரிசா மாநிலம் நியம்கிரி மலைப் பகுதியில் வாழும் கோந்த் பழங்குடி மக்களிடையே பயணம் போய்விட்டு சமீபத்தில் திரும்பிய பியாங்காவை ‘‘டெகல்கா’’ பத்திரிக்கையின் செய்தியாளர் சோமா சௌதுரி பேட்டி கண்டுள்ளார். நியம்கிரி பழங்குடி மக்கள் அடியோடு அழிந்து போகுமாறு அங்கு சுரங்கங்கள் தோண்டி, கனிமங்களைக் கொள்ளையிடும் வேதாந்தா என்ற பன்னாட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பியாங்கா தனது நேர்காணலில் விளக்குகிறார். அதன் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.**

● தங்களது நியம்கிரி பயணம் எவ்வாறிருந்தது? அங்கு வேதாந்தாவின் சுரங்கத் திட்டம் எவ்வாறு உள்ளது?

★ நான் முப்பது ஆண்டுகளாக மனித உரிமைகள், சமூக நீதி, சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக குரல் கொடுத்து வருபவள். பியாங்கா ஜாக்கர் மனித உரிமைகள் அமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவர். இந்தியாவை நேசிப்பவளாகவும், இந்த நாட்டுடன் நீண்ட நாள் உறவு கொண்டவளாகவும் இருக்கிறேன். இது பலருக்கும் தெரியும். அதனால்தான் ‘‘உதவும் செயலகம்’’ என்னை அணுகியது; வேதாந்தா பங்குதாரர்களின் லண்டன் கூட்டத்தின் நேருரை அளிக்கவிருந்த பழங்குடித் தலைவர் சீத்தாராம் குலிசிகாவைச் சந்திக்கும் படி அந்த அமைப்பு என்னிடம் கேட்டுக் கொண்டது. ஒதுக்கிவிட முடியாத வலுவான அவரது நேருரையும் தனது தாய்நாட்டின் மீதும் மக்கள் மீதும் அவருக்கிருந்த கடப்பாடும் கண்டு நான் நெகிழ்ந்து போனேன்.

‘‘சுரங்கம் தோண்டுவதை அவர்கள் ஒருமுறை தொடங்கி விட்டால் போதும், ஆறுகள் வறண்டு போகும், எங்கள் வாழ்வாதாரங்களையெல்லாம் இழந்து விடுவோம்’’ என்று சொன்னார். ‘‘நகரங்களுக்கேற்ப எப்படித் தகவமைத்துக் கொள்வது என்பது எங்களுக்குத் தெரியாது; எங்கள் வாழ்க்கை முறை அங்கு கிடைக்காது; நாங்கள் அழிந்து போய்விடுவோம்’’ என்றார். ஒரிசாவில் வேதாந்தா என்ன செய்கிறது என்பதைக் கேட்டு நான் மிகவும் திகைத்துப் போனேன்; உடனே நான் வேதாந்தாவின் பங்குகளை வாங்கிக் கொண்டு, அதன் பங்குதாரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

வேதாந்தா பிரகாசமான படமொன்றைத் திரையிட்டது; இந்தியாவில் அது செய்துவரும் அதிசயங்களை எல்லாம் அது காட்டியது. ஆனால், வேதாந்தா செயல்படும் அங்கு சர்வதேசப் பொது மன்னிப்பு அமைப்பு, உதவும் செயலகம், சர்வதேச வாழ்வியல் மற்றும் இந்தியக் குழுக்கள் போன்ற பல அமைப்புகள் உள்ளன. அவை, பல கேள்விகள் எழுப்பி, வேதாந்தா கம்பெனியின் மனித உரிமை மீறல் அட்டூழியங்களுக்கான ஆதாரங்களை முன் வைத்தன. அவற்றுக்கு வேதாந்தாவின் நிறுவன இயக்குனர் அனில் அகர்வாலிடம் பதில்கள் ஏதுமில்லை; எனவே பிரெஞ்சு பத்திரிக்கை ‘‘தி கார்டிய’’னில் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தேன். வேதாந்தாவில் தங்கள் ஈடுபாட்டை மறுபரிசீலனை செய்யும்படி வலியுறுத்திப் பிரச்சாரம் செய்தேன். ஒரிசாவுக்குச் செல்வது எனது அடுத்த நடவடிக்கையானது.

● இத்திட்டத்தில் தவறானது என்று வடிகட்டிப் பார்த்தால் எதைத் தெரிவு செய்வீர்கள்?

★ தவறானது எது என்பது மிக முக்கியமான கேள்வி. வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்ற பெயரால் பழங்குடிகள் மற்றும் பூர்வகுடி சமூகங்களின் அடிப்படை உரிமைகளைத் தியாகம் செய்யவேண்டும் என்று இந்த இருபத்தோராம் -ற்றாண்டில் நாம் சொல்கிறோமா? கூட்டுப் பங்கு நிறுவனங்கள் நமது இயற்கை வளங்களைக் கொள்ளையிடுவதற்கு வசதியாக அவர்களின் வாழ்விருப்பையே ஆபத்துக்குள்ளாக்கப் போகிறோமா? கூட்டுப் பங்கு நிறுவனங்களும் அரசும் மக்களுடைய வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க வேண்டிய சமூக மற்றும் கூட்டுப் பங்கு நிறுவனப் பொறுப்பை, கூட்டுப் பங்கு நிறுவனங்களும் அரசும் தாமே முன்வந்து அங்கீகரிக்க வேண்டும் என்ற காலக் குறியை நாம் வந்தடைந்து விடவில்லையா?

நியம்கிரி மலை மிக முக்கியமான மழை பொழிவுக் காடுகளைக் கொண்டது. கோந்த் பழங்குடிகள் அதைப் புனிதமானதாக மட்டும் கருதவில்லை; தங்களின் மரபைப் பேணிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்; இயற்கையோடு பொருத்தமான ஒரு முழு தன்னிறைவு வாழ்வும் வாழ்ந்திருக்கிறார்கள். வெளியிலிருந்து உப்பும் பெட்ரோல் எரிபொருளும் மட்டும் அவர்கள் வாங்கினர்.



படிப்பகம்

''தண்ணீருக்கு வெளியே மீன் எப்படி உயிர் பிழைத்திருக்க முடியாதோ, அதைப்போல நியம்கிரிக்கு வெளியே நாங்கள் உயிர் பிழைத்திருக்க முடியாது'' என்று பழங்குடி முதியவர்களில் ஒருவர் என்னிடம் சொன்னார். நெடுந்தொலைவில் உள்ள இந்தப் பகுதிக்குப் போய், இந்த அழகான மக்களைப் பார்த்தால் உண்மையை நாம் புரிந்து கொள்வோம். வேறெங்கும் இவர்கள் உயிர் வாழ்ந்திருக்க முடியும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்?



நிகராகுவா நாட்டைச் சேர்ந்த மனித உரிமைப் பாதுகாப்பு செயல்வீரர் பியாங்கா ஜாக்கர்.

மேலும், கோந்த் பழங்குடிகள் மட்டும் பிரச்சினை இல்லை. மலையின் உச்சி பாக்சைட் கனிம வளமிக்க பீடபூமியைக் கொண்டது. இந்த மலையின் உச்சியில் உள்ள மழை நீர்ப்பிடிப்பு இந்தியாவின் இரு பெரும் ஆறுகளுக்கும் சுமார் 34 ஓடைகளுக்கும் நீர் கொண்டு சேர்க்கிறது. வேதாந்தா திட்டம் கோந்த் பழங்குடிகளின் வாழ்வுக்கு மட்டும் ஆபத்தாக இருக்காது. அது நீர் ஆதாரங்களைப் பாதிக்கும்; ஓடைகள், ஆறுகளின் கீழ்ப்பகுதிகளில் உள்ள பிற சமூகங்களையும் பாதிக்கும்.

எனவே, இந்தத் திட்டம் அதன் விலைக்குப் பொருத்தமானதா? வேதாந்தா நிறுவனத்தார் அரசையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டுள்ளார்கள் என்ற ஒரே காரணத்துக்காக தப்பித்துக் கொள்கிறார்கள். இந்தியாவில் உள்ள வேதாந்தாவில் 25 சதவீதம் பங்கு அரசுக்குச் சொந்தமானது என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் எனக்குச் சொல்லுகின்றன. எனவே, ஒரிசா அரசு இனிமேலும் ஒரு நம்பத் தகுந்த தரகனாக இருந்து, கம்பெனியைப் பதில் கூறும் பொறுப்புடையதாக்கவோ, மனித உரிமைகள் மற்றும் சுற்றுச் சூழல் சட்டங்களையும், விதிகளையும் கடைப்பிடிக்கும்படி செய்யவோ முடியாது. அரசே கம்பெனியின் ஒரு பகுதியாகி விட்டது.

**● திட்டத்தின் அடிப்படை அனுமானத்தையே நாம் மறுபரிசீலனை செய்வது அவசியமா? அது ஏழைகளுக்காக குரல் கொடுக்குமா? இது நம்மை எங்கே இட்டுச் செல்லும்; விமானத்தில் பறக்கிறோம்; குளிர் சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்துகிறோம்; பெரிய கார்களில் சவாரி செய்கிறோம்; ஆனால் இவ்வாறான முன்னேற்றத்தின் பயனாளிகளான நாம் அதை விமர்சிக்கிறோம்...**

★ மத்திய மற்றும் தென் அமெரிக்காவிலுள்ள அரசாங்கங்களின் பகுத்தறிவற்ற சுற்றுச்சூழல் கொள்கைகள் பற்றி அவற்றோடு என் வாழ்நாள் முழுவதும் நான் அடிக்கடி மோதுகிறேன். ''பியாங்கா, வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்காகவும் வேண்டி இதைச் செய்வது அவசியமாக உள்ளது; மக்களுக்கு வேலை வாய்ப்பைக் கொண்டு வர வேண்டியுள்ளது; நமது அந்நியக் கடன்களுக்கு தவணை செலுத்த வேண்டும், ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்'' என்று மீண்டும் மீண்டும் எனக்குச் சொல்லப்பட்டது. உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் அது, பூர்வகுடிமக்கள், விவசாயிகள் மற்றும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இல்லை; வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இல்லை. பன்னாட்டுத் தொழில் கழகங்கள் மிகப் பெரிய இலாபமீட்டுவதற்கு உதவிய தன் மூலம் சுற்றுச்சூழலுக்கு பேரழிவும் இயற்கை மூலதாரங்களுக்கு நாசமும் விளைவித்ததற்கான தழும்புகளை மட்டும்தான் அது விட்டுச் சென்றிருக்கிறது. ஆனால், அது மக்களுக்கு எப்போதும் பயன்பட்டதே இல்லை. சிலரைக் கோடீசுவரர்களாக்கியது தவிர, சம்பந்தப்பட்ட நாடுகளின் நிலையையும் உயர்த்தி விடவில்லை. எனவே, சுற்றுச்சூழலை அழிக்காது, மக்கள் அனைவரையும் உள்ளடக்கி, அவர்களது வாழ்வை முன்னேற்றுகிற, நீடித்த ஒரு வளர்ச்சியின் அவசியத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

**● இந்தியா உட்பட உலகம் முழுவதும் சுரங்கத் தொழிலைத் தொடர்ந்து ஊழல் கவ்விக் கொண்டுள்ளது. நாம் சட்டம் போடலாம். ஆனால் அதிகாரத்திலுள்ளவர்களை அவர்கள் விலைக்கு வாங்கிவிட முடியும். இதற்குத் தங்கள் பதிலென்ன?**

★ நமது நாகரிகத்தை ஒரு விளிம்புநிலைக்குத் தள்ளிவிட்டோம் என்று நான் நம்புகிறேன். பேரழிவு விளைவிக்கும் பருவநிலைச் சூழலைப் பின்னிழுக்க வேண்டும் என்பதில் பாரிய அக்கறை கொள்வதானால் மாறுபட்ட வாழ்க்கை முறையைக் கட்டாயம் நாம் நடத்த வேண்டும். அது சரி, நமது வாழ்க்கை முறையையும் உண்மையில் மாற்றுவது பற்றி நாம் பேசினால் ஒவ்வொருவரும் நடுநடுங்கிப் போகிறோம். ஆனால், இதுதவிர அரசு அவசியம் சிந்திக்க வேண்டிய மிக முக்கியமான வேறொன்று உள்ளது.

பல அந்நிய ஆக்கிரமிப்புகளுக்கும், ஒரு புரட்சிக்கும் உள்ளான ஒரு நாட்டிலிருந்து நான் வருகிறேன். போரால் பெரும் பேரழிவுக்குள்ளான நாடுகளின் மக்களிடையே பல ஆண்டுகள் நான் பணியாற்றியுள்ளேன். மக்களுடைய வாழ்வாதாரங்களைக் காவு கொண்டு இயற்கை வளங்களை தராதரமின்றிக் கொள்ளையிடுவது எல்லா இடங்களிலும் புரட்சிகர எழுச்சியைப் பெற்றெடுப்பதை நான் கண்டிருக்கிறேன். இது புதிதானதோ, அல்லது இந்தியாவுக்கு மட்டும் உரித்தானதோ இல்லை. எனவே, இது குறித்து இந்திய அரசு மீளாய்வு செய்வது அவசியம். அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆயிரக்கணக்கான மக்களை அவர்களது மூதாதையர் நிலங்களிலிருந்து விரட்டி, அவர்களது அடிப்படை மனித உரிமைகளை நீங்கள் மறுத்துவிடுவீர்களேயானால், அவர்கள் தமது வாழ்விருப்பிற்கான வழிமுறை

கள் இல்லாமல் போய் விடுவார்கள் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்; கோந்த் என்னிடம் சொன்னவாறு, அவர்கள் இழப்பீடுகளை விரும்பவில்லை. நிலத்திற்குப் பணம் இழப்பீடாக முடியாது; எனவே, போரை எப்படித் தவிர்ப்பது என்பதுதான் பிரச்சினை. மக்கள் மீது குண்டுவீசுவது அல்லது இராணுவத்தை இறக்கி விடுவது மூலம் நீங்கள் போரைத் தவிர்க்க முடியாது; அதற்குப் பதிலாக உண்மையில் பிரச்சினையின் வேர்களைக் கண்டறிய வேண்டும்.

**● சுரங்கங்கள் தோண்டுவது, அரசு அடக்குமுறை, புரட்சி மற்றும் அதன் விளைவு பற்றி உங்களுடைய லத்தீன் அமெரிக்க அனுபவம் என்ன?**

★ அவை முன்மாதிரியானவை. மிகவும் செல்வந்தருக்கும் மிகவும் ஏழைக்கும் பெரும் இடைவெளி உள்ளது. அரசாங்கங்கள் எல்லாம் தாம் துரத்தியடித்த ஏழை மக்களின் நலன்களைப் பாராது, இயற்கை வளங்களைக் கொள்ளையிடும் பன்னாட்டுத் தொழில்கழகங்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ளார்கள். நிகராகுவா, பிற லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் வளரும்

**● சுரங்கத் தொழில் மற்றும் பெரும் கூட்டுப் பங்கு நிறுவன முறைகேடுகளின் நோய் குறியீடாக வேதாந்தாவை எது ஆக்கியது?**

★ நான் இதுவரை கண்ட நிறுவனங்களிலேயே வேதாந்தா மிக மோசமானது; ஆனால் மிகவும் அதிர்ச்சியூட்டக் கூடியது என்னவென்றால், இது இருபத்தோராம் -ற்றாண்டில் நடக்கிறது. ஒப்பற்ற மக்கள் தொடர்பு பிரச்சாரத்தின் மூலம் உலகுக்கே தவறான புரிதலை உருவாக்குகிறது. பல்கலைக்கழகங்கள் கட்டுவது போன்ற நல்லவற்றை மக்களுக்காக அது செய்யப் போகிறது என்று மக்களை நம்ப வைக்கிறது; ஆனால், எல்லாம் பொய். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதற்கு இங்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு மட்டும் தருகிறேன். அதன் அலுமினிய கச்சாப் பொருள் சுத்திகரிப்பு ஆலைக்கு மிக அருகில் உள்ள போந்தேகுடா என்றொரு இடத்தில் ஒரே ஒரு கிராமத்தை மட்டும் காலி செய்து ஒரு ஆலையை அமைத்து, ஒவ்வொருவருக்கும் வேலை தருவதாக கிராமத்தாருக்குக் கம்பெனி சொன்னது. ஏற்கெனவே நான்கு கிராமங்களைக் காலி செய்து






வேதாந்தா நிறுவனத்தின் நிலப்பறிப்பை எதிர்த்து ராஞ்சி நகரில் பழங்குடியினர் நடத்தும் ஆர்ப்பாட்டம். (இடது-கோப்புப் படம்)
''நாங்கள் டோங்கிரியா கோந்த் இனப் பழங்குடியினர். எங்களிடமிருந்து நியம்கிரி மலையை வேதாந்தா நிறுவனம் அபகரிக்க முடியாது'' - ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆர்த்தெழுந்த கோந்த் பழங்குடியின மக்கள். (கோப்புப் படம்).

உலகம் முழுவதும் சுரங்கங்களில் நோய்களால் மாண்டுபோன மக்களது தடயங்களைக் காணலாம். மேலும் தொடர்ந்து குவாதிமாலா, சால்வடார், நிகராகுவா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் பிற பல நாடுகளில் எல்லாம் புரட்சிகர எழுச்சிகளையும் காணலாம். கெட்ட நிகழ்வாக, பல புரட்சிகளும்கூட இறுதியில் மக்களுக்குத் துரோகம் செய்து விட்டன. எனவே, இந்திய அரசாங்கம் இம்மாதிரியான எடுத்துக்காட்டுகளையும் கவனத்தில் கொள்வது மிகவும் முக்கியமானது. பழங்குடி மக்களுக்கும் விவசாயிகளுக்கும் எதிராகத் தாம் பயன்படுத்தும் ஒடுக்கும் முறைகளை ஒரிசா மற்றும் பிற மாநில முதலமைச்சர்கள் ஒருமுறைக்கு இரண்டு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். காந்தியும் நேருவும் பழங்குடி மக்கள் உரிமைகள் குறித்து என்ன சொன்னார்கள் என்பதை இந்திய அரசியல்வாதிகள் படிப்பது முக்கியமான ஒன்றாக இருக்கலாம். வளர்ச்சித் திட்டங்களைப் பழங்குடி மக்களின் தொண்டைக்குள் திணிக்க முடியாது.

விட்டது; நிலப்பட்டா வைத்திருப்பவர்களுக்கு (உங்களுக்குத் தெரியும் அவர்கள் ஒரு சிலரே குறிப்பாக பழங்குடிகள் நிலப்பட்டா வைத்திருக்க மாட்டார்கள்.) ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாயும், நிலப்பட்டா இல்லாதவர்களுக்கு 50,000 ரூபாயும், வீடுகளைக் காலி செய்பவர்களுக்கு மிகக் குறைந்த அளவாக ஆயிரம் ரூபாய் தருவதாகவும் வாக்குறுதி கொடுத்திருந்தது. பாருங்கள் வெறும் ஆயிரம் ரூபாய் தான்! அதாவது 20 டாலர்தான்! இது அதிர்ச்சியடையச் செய்கிறது. அது சரி, அவர்களுக்கு இன்னமும் வேலையெதுவும் தரப்படவில்லை. இந்த அலுமினியம் சுத்திகரிப்பு ஆலையில் 57 வெளிநாட்டவர்கள் வேலை செய்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

எனவே, 2003-ஆம் ஆண்டு, அறிவிக்கப்பட்ட பகுதியை வெகுதூரம் தாண்டிக் காடுகளைக் கம்பெனி வெட்டத் தொடங்கியதையும் அது அளித்த வாக்குறுதி


படிப்பகம்

கள் எல்லாம் பொய்யாகிவிட்டதையும் மக்கள் கண்ட போது, ஆலைக் கட்டுமான இடத்துக்கு எதிராக ஆர்ப் பாட்டங்களை நடத்த முடிவு செய்தார்கள். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என சுமார் 400 பேர் திரண்டனர். ஆண்கள் அனைவரையும் ஏழு நாட்கள் போலீசார் சிறையில் அடைத்தனர். அவர்களை விடுதலை செய்த போது, அவர்கள் சமூக விலக்கம் செய்யப்பட்டவர்கள் ஆகிவிட்டார்கள், பூரி ஜகந்நாதர் கோவிலுக்குப் போய் பாவத்தைக் கழுவவேண்டுவது அவசியமாகி விட்டது என்று சொல்லப்பட்டது. அவர்களைப் பலவந்தமாக பூரிக்குக் கொண்டு செல்வதற்கு வேதாந்தா நிறுவன குண்டர்களோடு போலீசும் பயன்படுத்தப்பட்டார்கள்; அதுசமயம் சுத்திகரிப்பு ஆலையைச் சுற்றிச் சுற்றுச் சுவர் எழுப்பிக் கொண்டார்கள். அங்கிருந்த பழங்குடியினரின் மூதாதையர் இடுகாட்டை, பாரம்பரிய மரபு விதியை மீறி அழித்து, வேதாந்தா ஆலையின் வளாகத்துக்குள் சட்டவிரோதமாக சேர்த்துக் கொண்டார்கள். அதாவது, பழங்குடியினர் தமது மூதாதையரை இனிமேலும் வழி பட போக முடியாது. இது பாரிய மனித உரிமைகள் மீற லாகும். இதில் அசாதாரணமானது என்னவென்றால், இவையெல்லாம் ஒரிசா அரசு மற்றும் போலீசின் உடந் தையோடு செய்யப்பட்டுள்ளன என்று என்னிடமுள்ள ஆவணங்கள் காட்டுகின்றன. புவனேசுவரில் உள்ள பிஜு பட்நாயக் விமான நிலையத்தில் நான் இறங்கியபோது ''சுரங்கத் தொழில் ஒரிசா மக்களுக்கு மகிழ்ச்சியை வழங் குகிறது'' என்ற விளம்பரப் பலகை என்னைத் தாக்கியது. என்னவொரு கேலிக்கூத்து! அலுமினியம் சுத்திகரிப்பு ஆலை அப்பகுதி சமூகங்களுக்கு துயரத்தையும், நோயை யும், பட்டினியையும் தவிர, வேறெதையும் தரவில்லை.

**● இந்திய ஜனநாயகத்தில் பிரச்சினை இப்போது அது வெறுமனே தேர்தல்களோடு சமப்படுத்தப்படு கிறது.**

இது ஒரு இந்தியப் பிரச்சினையாக மட்டுமில்லை. இது முதலாவதாக அமெரிக்கா கொண்டு வந்தது. ஆப் கானில் ஒருவரையொருவர் படுகொலை செய்து கொண்டிருக்கையில் தேர்தல் நடத்தப்படுகின்றன. இறு தியில் அவை ஜனநாயகமே இல்லை. ஈராக்கில் மக் களே பங்கேற்காத தேர்தல்கள் நடத்தப்பட்டன. லத்தீன் அமெரிக்காவில்கூடத் தேர்தல்கள் நடத்தப்படுவதால், ஜனநாயகம் நிலவுவதாகி விடாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். ஜனநாயக அரசைக் கட்டியெழுப் புவதற்கு தேர்தல்களுக்கு மேலாகப் பலவும் தேவைப் படுகின்றன.

**● எனவே, தார்மீகம் மிக்க கூட்டுப் பங்கு நிறுவன நடைமுறையை நாம் முன் தள்ளவேண்டுமா?**

★ ஈக்குவடாரில் ஐந்து பூர்வகுடி ஆதிவாசிகள் உள் ளிட்ட சமூகங்களிடையே நான் பணிபுரிகிறேன். டெக் சாகோ எண்ணெய் நிறுவனத்தை நீங்கள் அறிந்திருப்பீர் கள். (அது செவரானுடன் இணைந்து இப்போது செவ ரான் என்றே அறியப்படுகிறது). அது ஈக்குவடார் நாட் டில் 20 ஆண்டுகளாகச் செயல்படுகிறது. இந்தக் காலத் தில் இந்நாட்டின் போர்வையாக உள்ள மழைவளக் காடுகளை அழித்து, அனைத்து நீர்வளங்களையும் மாசு படுத்தி விட்டது; 1919-ஆம் ஆண்டு டெக்ஸாஸில் நிறை வேற்றப்பட்ட சட்டப்படி, நீர் மூலாதாரங்களுக்கு எண் ணெய் கசிந்து பரவிவிடாதவாறு எல்லா எண்ணெய்க் குழிகளையும் உள்பூச்சுப் பூசிவிட வேண்டும் என்று எண்ணெய் கம்பெனிகளுக்கு ஆணையிடப்பட்டது. ஆனால், அதற்கு கொஞ்சம் செலவிட வேண்டும் என் பதால் அவ்வாறு செய்யவில்லை. இதனால் பல ஆண் டுகளாக ஈக்குவடார் மக்கள் மாசுபட்ட நீரைக் குடிக்கி றார்கள், சமைக்கிறார்கள், குளிக்கிறார்கள், நீந்துகிறார் கள்; இதன் காரணமாக புற்றுநோய் மற்றும் ரத்தப் புற்று நோயால் மடிகிறார்கள். குழந்தைகள் தோல் நோய்களா லும், பெண்கள் தன்னியல்பான கருச்சிதைவினாலும் அவதிப்படுகிறார்கள்.

1993-ஆம் ஆண்டு அவர்கள் தமக்குள் அமைப்பாகி கம்பெனியின் தாய்நாடான அமெரிக்காவில் ஒரு மூல வழக்கு தாக்கல் செய்தனர். வழக்கு இன்னமும் நடக்கி றது; ஆனால், இன்று 600 கோடி டாலர்கள் இழப்பீ டாகப் பெறுவதற்கான வாய்ப்பிருக்கிறது. ஒரு மிகப் பெரிய நிறுவனத்துக்கு எதிராக நெடுந்தொலைவுக்குள் வாழும் பூர்வகுடி மக்கள் ஒன்றுதிரண்டு அமைப்பாகிப் போராட முடியும் என்று நீங்கள் ஒருபோதும் கனவு கண் டிருக்க முடியாது. ஆனால், அவர்கள் அதைச் செய்தார் கள். இந்த வழக்கில் அவர்கள் வெல்ல முடியுமானால் — அவர்கள் வெல்வார்கள் என்று நம்புகிறேன் — வளர் முக அல்லது தொழில் எழுச்சியுறும் தேசங்களில் தண் டனையின்றித் தப்பித்துக் கொள்ளும் வகையில் இனி மேலும் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் செயல்பட முடி யாது என்ற தெளிவான செய்தியைச் சொல்லும். ●

**குறிப்பு:**

*பியாங்கா ஜாக்கர் ஒரு கம்யூனிசப் புரட்சியாளர் அல்ல. உள்நாட்டு பாசிச சர்வாதிகாரத்தையும் அமெ ரிக்க மேலாதிக்கத்தையும் எதிர்த்து ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்று, அமெரிக்கத் தலையீடு-நெருக்குதல் காரணமாகப் பின்னடைவு ஏற்பட்டு, அதன் அடிவருடி ஆட்சி நிறுவப்பட்டு, பின்னர் தேர்தல்கள் மூலம் மீண் டும் அமெரிக்க எதிர்ப்பு ஆட்சி நிறுவப்பட்ட நிகாரகுவா நாட்டைச் சேர்ந்த மனித உரிமைகள், சமூகநீதி மற்றும் சுற்றுச் சூழலியல் ஆர்வலர்தான் அவர். எனவே, காந்தி, நேரு, போன்றவர்கள் பற்றிய கறாரான மதிப் பீடுகள் கொண்டவரல்ல. பிற்போக்கு ஆட்சியாளர்களி டம்கூட ஜனநாயகப்பூர்வமான மனமாற்றத்தை எதிர் பார்ப்பவர். அவரது கண்ணோட்டத்தை முழுமையாக நாம் ஏற்கவில்லை என்ற போதும், வேதாந்தா போன்ற பன்னாட்டு கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்கு எதிராக வும், பழங்குடி மற்றும் பரந்துபட்ட மக்களுக்கு ஆதர வாகவும் அவர் முன்வைக்கும் முற்போக்கு கருத்துக் களுக்காக அவரது நேர்காணலை இங்கே வெளியிடு கிறோம். ''தெகல்கா'' ஏட்டிற்கு நன்றி.*

**— ஆசிரியர் குழு.**

www.padippakam.com

# தனியார் நகரங்கள்:

# நவீன சமஸ்தானங்கள்!

**தனியாரால் உருவாக்கப்படும் புதிய நகரங்களின் நிர்வாகத்தில் அரசு தலையிட முடியாது.**


லாவாசா கார்ப்பரேஷன் என்ற தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனம், மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள புனே நகருக்கு அருகே ''லாவாசா'' என்ற பெயரில் புதிய நகரமொன்றை வெகுவேகமாக அமைத்து வருகிறது. மும்பய்ப் பெருநகரம் மக்கள் தொகைப் பெருக்கத்தால் பிதுங்கி வழிவதைப் பார்க்கும்பொழுது, இப்புதிய நகர நிர்மாணம் நல்ல விசயம்தானே என நம்முள் பலரும் கருதலாம். ஆனால், இந்தப் புதிய நகரம் யாருக்காக நிர்மாணிக்கப்படுகிறது என்பதுதான் கேள்வி. தனியார்மயம் பெத்துப்போடும் புதுப் பணக்காரக் கும்பலுக்காக உருவாக்கப்படும் நகரம்தான் இந்த ''லாவாசா''.

மகாராஷ்டிராவின் புனேக்கு அருகே ''லாவாசா'', அம்மாநிலத்தின் தலைநகர் மும்பய்க்கு அருகே ''ஆம்பி பள்ளத்தாக்கு'', அரியானா மாநிலத் தலைநகர் சண்டிகர் அருகே ''நானோ சிட்டி'', தமிழ்நாட்டின் சென்னை -மகாலிங்கபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் ''ஒருங்கிணைந்த சமூகம்'' என இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் புதிய நகரங்கள் உருவாகி வருகின்றன.

இப்புதிய நகரங்களில் அமையவுள்ள குடியிருப்புகள், கேளிக்கை விடுதிகள், சமூகக் கூடங்கள், வர்த்தக அங்காடிகள் போன்ற அசையா சொத்துகள் மட்டும் தனியாருக்குச் சொந்தமானவை கிடையாது. அந்நகரில் வரி வசூலிப்பது தொடங்கி அந்நகரைக் காவல் காப்பது வரையிலான பிற பொறுப்புகள் அனைத்தும் அந்நகரை எந்தத் தனியார் நிறுவனம் அமைத்து வருகிறதோ, அத்தனியார் நிறுவனத்திற்கும், அதனின் பங்குதாரர்களுக்கும் மட்டுமே உரியது. இப்புதிய நகரங்களுக்குத் தேவைப்படும் தண்ணீர், மின்சாரம் போன்ற அத்தியாவசிய தேவைகளைத் தருவதோடு அரசின் பொறுப்பு முடிந்து விடுகிறது. சுருக்கமாகச் சொன்னால், புதிய தனியார் நகரங்கள் என்ற பெயரில் புது வகை சமஸ்தானங்கள் இந்தியாவிற்குள் உருவாகி வருகின்றன.

நகர நிர்வாகத்தைத் தனியார்மயமாக்க வேண்டும் என்ற உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளை நடைமுறைக்கு வந்தால் எப்படியிருக்கும் என்பதற்கு, இப்புதிய நகரங்கள் எடுப்பான உதாரணங்களாக அமைகின்றன. லாவாசா நகரை நிர்மாணித்து வரும் லாவாசா கார்ப்பரேஷனுக்கு, மகாராஷ்டிரா மாநில அரசு, ''சிறப்புத் திட்ட வரைவு ஆணையம்'' என்ற தகுதியை வழங்கியிருக்கிறது. லாவாசா கார்ப்பரேஷன் இத்தகுதியைப் பயன்படுத்திக் கொண்டு, நகராட்சிக்கு அல்லது மாநகராட்சிக்கு இணையான அதிகாரங்களைக் கொண்ட தனியார் நகர நிர்வாகக் குழுவை அமைத்துக் கொள்ள முடியும்.

சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கும் போலீசு பணிகள் அரசின் தனியுரிமையாக இருந்து வருகிறது. ஆனால், லாவாசா கார்ப்பரேஷனோ, அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, தனது நகரில் சட்டம்-ஒழுங்கு மற்றும்




சென்னை – மகாபலிபுரம் சாலையில் அமைக்கப்பட்டு வரும் ''ஒருங்கிணைந்த சமூகம்'' என்ற தனியார் நகரம் பற்றிய வர்த்தக விளம்பரம்.

காவல் பணிகளைப் பராமரிக்கும் பொறுப்பை நிர்வகிக்கத் தனியொரு போலீசு படையைக் கட்டும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்நகரின் நிர்வாகம் தொடர்பாக, அரசோ அல்லது வேறு சிவில் அமைப்புகளோ எந்தவிதத்திலும் மூக்கை நுழைக்க முடியாது.

''இந்தியாவிலுள்ள நகரங்களில் காணப்படும் மக்கள் நெரிசலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால், லாவாசா போன்று -ற்றுக்கும் மேற்பட்ட நகரங்களை உடனடியாக நிர்மாணிக்க வேண்டும்'' எனக் கூறுகிறார்


படிப்பகம்



மும்பையில் உள்ள அன்னா பாவ் சாதேநகரில் உள்ள குடிசைகள் மாநகராட்சியால் இடித்துத் தள்ளப்பட்டதால், அகதிகளாக்கப்பட்ட உழைக்கும் மக்கள்.

கள், ரியல் எஸ்டேட் நிறுவன அதிபர்கள். மைய அரசும் இதே காரணத்தை முன்வைத்து, ‘‘அரசும் தனியாரும் கூட்டுச் சேர்ந்து புதிய நகரங்களை நிர்மாணிக்கும் பணிகளில் இறங்க வேண்டும்’’ என்பதை இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டிலேயே கொள்கை முடிவாக அறிவித்திருக்கிறது. ‘‘தற்பொழுதுள்ள பழைய நகரங்களில் நில வாடகை அதிகமாக இருப்பதால், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுவதாகவும், இதனைத் தவிர்ப்பதற்கு லாவாஸா போன்ற புதிய நகரங்களை உருவாக்க மாநில அரசுகள் முன்னுரிமை தர வேண்டும்’’ எனத் திட்ட கமிசனும் அறிவித்திருக்கிறது. அதாவது, நகர உருவாக்கம் மற்றும் நகர நிர்வாகம் ஆகிய பொறுப்புகளை அரசு கைவிடத் தயாராகிவிட்டது என்பதைத்தான் இந்த அறிக்கைகள் மறைமுகமாகத் தெரிவிக்கின்றன.

லாவாஸா கார்ப்பரேஷன், தான் அமைத்து வரும் புதிய நகரில் ஓட்டுநர் போன்ற அடித்தட்டு உழைக்கும் பிரிவினரும் தங்குவதற்கு ஏற்றவாறு குடியிருப்புகள் அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறது. தற்பொழுதுள்ள நிலவரப்படி, லாவாஸா நகரில் ஒரு மிகச் சாதாரணமான ஒண்டுக் குடியிருப்பை வாங்க வேண்டும் என்றால்கூட, குறைந்தபட்சம் 16 இலட்ச ரூபாய் தேவைப்படும். அடித்தட்டு மக்கள் மீது லாவாஸா கார்ப்பரேஷனுக்கு இருக்கும் அக்கறையை மெச்சுவதா அல்லது ஒரு 16 இலட்ச ரூபாய் கையிருப்பில் இல்லாத அடித்தட்டு மக்களின் அவல நிலையை நொந்து கொள்வதா என்ற இக்கட்டுக்கள் இங்கு நாம் சிக்கி விடுகிறோம்.

உண்மையில் பல்லாயிரக்கணக்கான மக்களின் குடியிருப்புகளையும் வாழ்வாதாரங்களையும் பறித்துவிட்டுத்தான் இப்புதிய நகரங்கள் உருவாகி வருகின்றன. குறிப்பாக, லாவாஸா கார்ப்பரேஷன் அமைத்து வரும் லாவாஸா நகருக்காக புனே மாவட்டத்தைச் சேர்ந்த 18 கிராமங்கள் முற்றிலுமாக கையகப்படுத்தப்பட்டு, அங்கு அதுவரை வாழ்ந்து வந்த மக்கள் நாடோடிகளாகத் துரத்தப்பட்டுள்ளனர். இந்த 18 கிராமங்களைச் சேர்ந்த நிலங்களைக் கையகப்படுத்துவதற்குப் பல விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாக லாவாஸா கார்ப்பரேஷன் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த அத்துமீறல்கள் குறித்து எந்தவொரு விசாரணையும் இதுவரை நடைபெறவில்லை. ஆனால், லாவாஸா நிர்வாகம் லாவாஸா நகரின் முதல் நகரியத்தை (Township) இந்த ஆண்டு இறுதிக்குள் திறக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

வேலை தேடி நகர்ப்புறங்களுக்கு வரும் கூலித் தொழிலாளர்களுக்கு நகரின் புறநகர்ப் பகுதிகளில்கூட வீடு கிடைப்பது தற்பொழுது குதிரைக் கொம்பாகிவிட்டது. அப்படியே வீடு என்ற பெயரில் ஒரு மாட்டுக் கொட்டகை கிடைத்தாலும், அதற்கான வாடகை அவர்களின் கூலியில் மூன்றில் ஒரு பகுதியை விழுங்கி விடுகிறது. அரசோ, இக்கூலித் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அக்கறை காட்டுவதில்லை என்பது ஒரு புறமிருக்க, இவர்களை நகர்ப்புறங்களிலிருந்து அப்புறப்படுத்துவதில்தான் குறியாக இருந்து வருகிறது. நகரை அழகுபடுத்துவது, ஆக்கிரமிப்புகளை அகற்றியது என்ற பெயரிலும், இயற்கைப் பேரிடர்களில் இருந்து பாதுகாப்பது என்ற பெயரிலும் இந்த அப்புறப்படுத்தல் அரங்கேறி வருகிறது.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பழைய நகரங்களிலேயே கூலித் தொழிலாளர்கள் குடியிருக்க முடியாது எனும்பொழுது, தனியார் முதலாளிகள் தமது ‘சொந்த’ப் பணத்தில் உருவாக்கும் புதிய நகரங்களில், கூலித் தொழிலாளர்கள் நிழலுக்கு ஒதுங்குவதற்குக்கூட இடம் கிடைக்குமா? இப்புதிய நகரங்கள் கூலித் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டிக் கொண்டு, அவர்களைக் கறிவேப்பிலை போலத் தூக்கியெறிவதில்தான் குறியாக இருக்கும்.

தனியார்மயம் பெத்துப் போட்டுள்ள புதுப் பணக்கார கும்பல் தமது பொழுதைக் கழிப்பதற்காக மால்கள் (Malls), சினிபிளக்ஸ்கள் (Cineplex), சூப்பர் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள் உருவாக்கப்பட்டிருப்பதைப் போல, அவர்கள் மட்டுமே வசிப்பதற்கென்று இப்புதிய நகரங்கள் உருவாக்கப்படுகின்றன. இப்புதிய நகரங்கள் சிங்கப்பூர் போல, துபாய் போல ஜொலிக்கும் என ஆளும் கும்பல் பீற்றிக் கொள்கிறது. உழைக்கும் மக்களைப் பொருத்தவரை இப்புதிய நகரங்கள், அவர்களால் நெருங்க முடியாத, புதுவகை அக்ரஹாரங்களாகவே இருக்கும்!

● குப்பன்

www.padippakam.com

# சட்டபூர்வமானது கல்விக் கட்டணக் கொள்ளை

## தமிழ்நாடு பள்ளிகள் கட்டண முறைப்படுத்தும் சட்டம், மெட்ரிக் பள்ளி முதலாளிகளுக்குச் சாதகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள தனியார் ''மெட்ரிக்'' பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்குக் கடிவாளம் போடப் போவதாகக் கூறிக்கொண்டு, தமிழ்நாடு பள்ளிகள் கட்டண முறைப்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது, தமிழக அரசு. இந்தக் கல்வியாண்டு முதலே இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கோவிந்தராசன் கமிட்டி, ஆரம்பப் பள்ளிகள் அதிகபட்சமாக ரூ.3,500 வரையிலும், நடுநிலைப் பள்ளிகள் ரூ.5,000 வரையிலும், உயர்நிலைப் பள்ளிகள் ரூ.8,000 வரையிலும், மேனிலைப் பள்ளிகள் ரூ.11,000 வரையிலும் ஆண்டு கல்விக் கட்டணமாக வசூலிக்கலாம் என நிர்ணயித்திருக்கிறது. பேருந்துக் கட்டணம், விடுதிக் கட்டணம் தவிர்த்து, பிற கட்டணங்கள் அனைத்தும் சேர்த்து இந்த வரம்பைத் தாண்டக் கூடாதென்றும், இந்த உத்தரவை மீறும் பள்ளிகளின் அங்கீகாரம் ரத்துசெய்யப்படும்; அதன் நிர்வாகிகள் மீது கிரிமினல் வழக்குத் தொடரப்படும் என்றும் தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

மெட்ரிக் பள்ளி முதலாளிகள் இந்தச் சட்டமும், இந்தக் கட்டண நிர்ணயமும் தங்களின் அடிப்படை உரிமையைப் பறிப்பதாகக் கூறி, இதனை ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றனர். அதாவது, கல்விக் கட்டணம் என்ற பெயரில் பொதுமக்களைக் கொள்ளையடிப்பது தங்களின் அடிப்படை உரிமை என்பது அவர்களின் வாதம். இதன் அடிப்படையில் இச்சட்டத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்திலும், பின்னர் உச்சநீதி மன்றத்திலும் வழக்குப் போட்டுத் தோற்றுப் போனார்கள். இதன்பின், பள்ளிகளைத் திறக்க மாட்டோம் என மிரட்டத் தொடங்கினார்கள்.



+2 தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்றும், தனியார் கல்லூரிகள் கேட்கும் கட்டணத்தைக் கட்ட முடியாமல் பரிதவித்து நிற்கும் ஏழை மாணவிகள். (கோப்புப் படம்; நன்றி: ஜூனியர் விகடன்)

தனியார் முதலாளிகள் பள்ளிகளைத் திறக்காவிட்டால், அந்தச் சுமை முழுவதும் தன் மீது விழுந்துவிடும் என ''உணர்ந்து'' கொண்ட தமிழக அரசு, ''கோவிந்தராசன் கமிட்டி நிர்ணயித்துள்ள கட்டணம் தமக்குக் கட்டுப்படியாகாது'' எனக் கருதும் பள்ளி நிர்வாகங்கள், கட்டணத்தை மறு நிர்ணயம் செய்யக் கோரி விண்ணப்பிக்கலாம் எனத் தற்பொழுது அறிவித்திருக்கிறது.

பள்ளிகளைத் திறக்க வேண்டிய பருவம் நெருங்கிவிட்ட இவ்வேளையில், ஒருபுறம் கட்டணத்தை மறு நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசு பேரம் நடத்திக் கொண்டிருக்க, இன்னொருபுறமோ, மெட்ரிக் பள்ளிகள் பழையபடியே மாணவர்களைச் சேர்ப்பதற்கு கட்டணக் கொள்ளையை நடத்திக் கொண்டிருப்பதாக முதலாளித்துவப் பத்திரிகைகளே அம்பலப்படுத்தி எழுதி வருகின்றன. கட்டணக் கொள்ளையைத் தடுக்க வந்ததாகக் கூறப்பட்ட சட்டமோ, தனது கண்களைக் கருப்புத் துணியால் கட்டிக்கொண்டு, இருட்டறையில் சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறது.

மெட்ரிக் பள்ளி முதலாளிகள், ''தரமான கல்வியைக் கொடுப்பதற்குத் தாங்கள் போட்டுள்ள முதலீட்டுக்கு ஏற்ப கட்டணம் நிர்ணயிக்கப்படவில்லை'' என அரசின் மீது குற்றஞ்சுமத்தி வருகிறார்கள். இதுவொரு அப்பட்டமான பொய். கோவிந்தராசன் கமிட்டி, பெற்றோர்களையோ, சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்


படிப்பகம்

களையோ கலந்து ஆலோசித்து இக்கட்டணத்தை நிர்ணயிக்கவில்லை. மாறாக, தமிழகத்திலுள்ள அனைத்து மெட்ரிக் பள்ளி முதலாளிகளிடம், அவர்களது வரவு-செலவு கணக்கையும், தரமான கல்வியைக் கொடுக்க ஒவ்வொரு பள்ளியும் என்னென்ன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது என்ற விவரத்தையும் கேட்டு, அவற்றின் அடிப்படையில் தான் ஒவ்வொரு பள்ளிக்கும் ஏற்றவாறு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரம்புக்குள் கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது



காஞ்சிபுரம் மாவட்டம் மேல்ஒட்டிவாக்கத்திலுள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன நல நடுநிலைப்பள்ளியின் அவலத் தோற்றம்: கல்வியைக் கைகழுவும் அரசின் அயோக்கியத்த

கோவிந்தராசன் கமிட்டி பள்ளி முதலாளிகள் கொடுத்த அறிக்கையை ஏ/சி அறைக்குள் உட்கார்ந்துகொண்டு ஆய்வுசெய்துதான் கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறதேயொழிய ஒவ்வொரு பள்ளிக்கும் நேரில் சென்று ஆய்வு நடத்திக் கட்டணத்தை நிர்ணயிக்கவில்லை. தாங்கள் கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில்தான் கட்டணம் நிர்ணயிக்கப்படும் எனத் தெரிந்த பிறகு, பள்ளி முதலாளிகள் அதற்கேற்றபடி கணக்கு வழக்குகளில் விளையாடி இருக்க மாட்டார்களா? அக்கமிட்டியில் உள்ள அதிகார வர்க்கத்தை இலஞ்சப் பணத்தால் குளிப்பாட்டி இருக்க மாட்டார்களா?

நெல், கோதுமை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை நிர்ணயிக்கும்பொழுது, அரசு விவசாயிகளிடம் நீங்கள் போட்ட முதலீடு எவ்வளவு என்றெல்லாம் ஆலோசனை நடத்துவதில்லை. கல்வியும், அது போன்ற அத்தியாவசிய சேவைதானே? இதற்குக் கட்டணம் நிர்ணயிக்கும்பொழுது மட்டும், முதலாளிகளிடம் கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியமென்ன?

மெட்ரிக் பள்ளி முதலாளிகள் போட்டுள்ள முதலீட்டிற்கு ஏற்ப குறிப்பிட்ட அளவு இலாபம் கிடைக்கும்படிதான் கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது, அரசு. இந்த இலாபம் போதாது என்பதுதான் பள்ளி முதலாளிகளின் புலம்பல். தமிழக அரசு பொதுமக்களின் 'நலனில்' இருந்துதான் இந்தப் பிரச்சினையை அணுகியிருப்பதாகக் கூறுவது உண்மையானால், ''இந்த இலாபத்திற்குள் நடத்த முடியாதென்றால், கடையை மூடிவிட்டுப் போங்கள்'' எனப் பள்ளி முதலாளிகளிடம் கறாராகச் சொல்லியிருக்கலாம். ஆனால், அரசோ, கட்டணத்தை மறுநிர்ணயம் செய்வதற்கு முதலாளிகளை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிறது.

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டணம் மறுநிர்ணயம் செய்யப்படும் எனச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள சலுகை, இப்பொழுது முதலாளிகளின் வசதிக்கேற்ப கட்டணம் மறுநிர்ணயம் செய்யப்படும் என்ற திசையில் செல்லத் தொடங்கிவிட்டது.

**தமிழக அரசிற்கும் மெட்ரிக் பள்ளிகளுக்கும் இடையே கட்டண நிர்ணயம் தொடர்பாக நடக்கும் யுத்தம், மெட்ரிக் பள்ளிகள் கோள்ளைக்கூடாரமாக மாறிவிடக் கூடாது என்பதற்காக அல்ல; மாறாக, கோள்ளையை எப்படித் தொடருவது என்பது குறித்துதான்.**

எனவே, இந்தச் சட்டத்தைக் கறாராக நடைமுறைப்படுத்தினால், மெட்ரிக் பள்ளிகள் நடத்திவரும் கட்டணக் கொள்ளையைக் கட்டுப்படுத்திவிடலாம் எனக் கூறப்படுவதெல்லாம் வெறும் மாயைதான். உண்மையைச் சொன்னால், மெட்ரிக் பள்ளிகள் நடத்திவரும் கட்டணக் கொள்ளையைச் சட்டபூர்வமாக்கிவிட்டது, தமிழக அரசு. தமிழக அரசிற்கும் மெட்ரிக் பள்ளிகளுக்கும் இடையே கட்டண நிர்ணயம் தொடர்பாக நடக்கும் யுத்தம், மெட்ரிக் பள்ளிகள் கொள்ளைக்கூடாரமாக மாறிவிடக் கூடாது என்பதற்காக அல்ல; மாறாக,

கொள்ளையை எப்படித் தொடருவது என்பது குறித்துதான்.

•••

தங்கள் பிள்ளைகளை மெட்ரிக் பள்ளிகளில் படிக்க வைத்து வரும் பெற்றோர்கள்தான் இச்சட்டம் பற்றியும், அதன் அமலாக்கம் பற்றியும் அதிக அக்கறை செலுத்த வேண்டும். ஆனால், அவர்களோ, எருமை மாட்டில் மழை பெய்த கதையாக, இன்றும்கூட இப்பிரச்சினை பற்றி சொரணையற்றுத்தான் இருக்கிறார்கள்.

''தாங்களே விரும்பி அதிகக் கட்டணம் செலுத்துவதாகப் பெற்றோர்களிடம் எழுதி வாங்குவது; வாங்கப்படும் அதிகக் கட்டணத்திற்கு உரிய ரசீது தராமல் துண்டுச்சீட்டில் கட்டணத்தையும் சேர்க்கை விவரத்தையும் எழுதிக் கொடுப்பது'' உள்ளிட்டப் பல வழிகளில் மெட்ரிக் பள்ளிகள் தங்களின் கட்டணக் கொள்ளையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டுதான் இருக்கின்றன. இது சட்டவிரோதமானது எனத் தெரிந்திருந்தும்கூட, நடுத்தர வர்க்கப் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் 'எதிர்காலம்' கருதி முணுமுணுப்போடு அடங்கிப் போய்விடுகிறார்கள். அவர்களைப் பொருத்தவரை, பீச், பார்க், சினிமா, ஹோட்டல் போன்ற சுகங்களைத் தியாகம் செய்து விட்டு, பிள்ளைகளை மெட்ரிக் பள்ளியில் படிக்க வைத்துவிட வேண்டும் என்பதுதான் குறிக்கோள்.

இதற்குப் பெயர் தியாகம் அல்ல; தவறை எதிர்க்கத் துணியாத, நியாயத்திற்காகப் போராட விரும்பாத தன்னலம். இந்தத் தன்னலமும், ஆங்கில வழிக் கல்வி மீது அவர்களுக்கு இருக்கும் முட்டாள்தனமான மோகமும் தான் மெட்ரிக் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு அடிப்படையாக இருக்கிறது. தமிழக அரசு சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கொண்டுவர முயன்றபொழுது, கல்வியின் 'தரம்' தாழ்ந்துபோகும் என மெட்ரிக் பள்ளிகளின் முதலாளிகளோடு சேர்ந்துகொண்டு சாமியாடியவர்களும் இவர்கள்தான். இப்பொழுது, அதே 'தரத்தை'க் காரணமாகக் காட்டித்தான், மெட்ரிக் பள்ளிகளின் முதலாளிகள் தங்களின் கட்டணக் கொள்ளையை நியாயப் படுத்தி வருகிறார்கள். மெட்ரிக் பள்ளிகளின் தரத்தின்




தமிழக அரசு கொண்டு வந்துள்ள கட்டண முறைப்படுத்தும் சட்டத்தின் மோசடித்தனத்தை அம்பலப்படுத்தி, புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

## நீர்த்துப்போன சமச்சீர் கல்வித் திட்டம்!

''சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் மெட்ரிக் கல்வி வாரியத்தைக் கலைக்க மாட்டோம்; ஆங்கில வழிக் கல்வித் திட்டத்தைக் கைவிட மாட்டோம்; தமிழகத்தில் மையக் கல்வி வாரிய பாடத் திட்டத்தின் கீழ் (சி.பி.எஸ்.சி.) இயங்கும் பள்ளிகளில் சமச்சீர் கல்வித் திட்டம் அமலாகாது'' - இப்படி பல சமரசங்களைச் செய்துகொண்டுதான் சமச்சீர் கல்வித் திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது. ஆனாலும், மெட்ரிக் பள்ளி முதலாளிகள் சமச்சீர் கல்வித் திட்டத்தால் கல்வியின் தரம் தாழ்ந்துபோகும் என ஒப்பாரி வைத்து, இத்திட்டத்தைத் தடைசெய்யக் கோரி வழக்கு தொடுத்தார்கள். சென்னை உயர்நீதி மன்றம் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டாலும், தமிழக அரசின் சமச்சீர் கல்வித் திட்டத்தை மேலும் நீர்த்துப்போகச் செய்யும் வண்ணம் பல நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

• சமச்சீர் கல்வித் திட்டம் பொதுப் பாடங்களுக்கு மட்டுமே பொருந்துமே தவிர, துணைப் பாடத் திட்டங்களுக்குப் பொருந்தாது. மெட்ரிக் பள்ளிகள் தங்கள் விருப்பம் போல துணைப் பாடங்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

• சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழக அரசு வெளியிடும் பாட -ல்களைத்தான் மெட்ரிக் பள்ளிகள் வாங்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்தக் கூடாது. அரசு அங்கீகரித்துள்ள பாடத் திட்டத்தின்படி (Syllabus) தனியார் வெளியிடும் பாட -ல்களை வாங்கிக் கொள்ளும் உரிமை மெட்ரிக் பள்ளிகளுக்கு உண்டு. இந்த நிபந்தனை சமச்சீர் கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கத்தையே சீர்குலைத்து விடுமென்றும், மெட்ரிக் பள்ளிகளின் நோட்டு-புத்தகக் கொள்ளைக்கு அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் என்றும் கல்வியாளர்கள் அம்பலப் படுத்தியுள்ளனர்.

• சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழக அரசு வகுக்கும் அனைத்து விதிகளையும் மெட்ரிக் பள்ளிகள் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை; தங்களால் முடிந்த விதிகளை மட்டும் அப்பள்ளிகள் பின்பற்றலாம். விதிகளைப் பின்பற்றவில்லை என்ற காரணத்தைக் கூறி மெட்ரிக் பள்ளிகளின் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சமச்சீர் கல்வித் திட்டம் இந்தக் கல்வியாண்டு முதல் அமலாவதை விரும்பாத உயர்நீதி மன்ற நீதிபதிகள், அதனை அடுத்த கல்வியாண்டுக்கு ஒத்திப்போடும் நரித்தனத்தில் இறங்கினார்கள். தமிழக அரசு இக்கல்வித் திட்டத்தை இந்த ஆண்டே அமலாக்கவில்லையென்றால், பாடப் புத்தகங்களை அச்சிட்ட வகையில் அரசுக்குப் பல கோடி ரூபாய் நட்டமேற்படும் என வாதாடியது. இதனையடுத்து, சமச்சீர் கல்விக்கான பாடத் திட்டத்தையும், அக்கல்வித் திட்டத்திற்கான விதிமுறைகளையும் மே 15, 2010-க்குள் தங்களிடம் காட்டினால், இந்தக் கல்வியாண்டு முதல் அமல்படுத்த ஒப்புதல் அளிப்பதாக இறங்கி வந்துள்ளனர், 'நீதி'பதிகள்.



சென்னையிலுள்ள டி.ஏ.வி. பள்ளியில் மாணவர்களுக்கு நடத்தப்படும் சதுரங்கப் பயிற்சி: மாணவர்களின் பல்திறனை வளர்ப்பது என்ற பெயரில் நடந்துவரும் கொள்ளை.
(கோப்புப் படம்)

அரசுப் பள்ளிகள் தரத்தில் மின்னுகின்றன என்பதல்ல நமது வாதம். ஆனால், அரசுப் பள்ளிகளுக்கு மாற்றாகக் கல்வியில் தனியார்மயம் புகுத்தப்படுவதும், அதை ஆராதிப்பதும் அபாயகரமானது என்பதைத் தான் நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

பின்னே உள்ள தகிடுதத்தங்களைப் பற்றிப் பேசினால், அப்பள்ளிகளின் வண்டவாளம் தண்டவாளம் ஏறிவிடும்.

அரசுப் பள்ளிகள் தரத்தில் மின்னுகின்றன என்பதல்ல நமது வாதம். ஆனால், அரசுப் பள்ளிகளுக்கு மாற்றாகக் கல்வியில் தனியார்மயம் புகுத்தப்படுவதும், அதை ஆராதிப்பதும் அபாயகரமானது என்பதைத்தான் நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரசு நிர்ணயித்த கட்டணத்திற்கு மேல் வசூல் வேட்டை நடத்திய தனியார் பொறியியல் கல்லூரிகளில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. ஆனாலும், இக்குற்றத்திற்காக எத்தனை பொறியியல் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டன, எத்தனை முதலாளிகள் மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டன என ஒரு விரலையாவது மடக்க முடியுமா? எம்.பி., எம்.எல்.ஏ.க்களே பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்தி வரும்பொழுது, இந்தச் சட்டம் -ல் பிசகாமல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதற்கு ஏதாவது உத்தரவாதம் உண்டா? ஆரம்பக் கல்வி தொடங்கி ஆராய்ச்சிக் கல்வி முடிய அனைத்து மட்டங்களிலும் தனியார்மயத்தைப் புகுத்த வேண்டும் என்பதே அரசின் கொள்(ளை)கையாக இருக்கும்பொழுது, கட்டணக் கொள்ளையை இக்கேடுகெட்ட அரசு தடுத்து நிறுத்திவிடும் என நம்பமுடியுமா?

கல்வி வள்ளல்கள் நடத்திவரும் கட்டணக் கொள்ளையைச் சட்டம் போட்டு தடுத்துவிட முடியும் என்பது, கடப்பாரையை முழுங்கிவிட்டு அது செரிக்க சுக்கு கசாயம் குடிப்பது போன்றது. அரசு பள்ளிகளையும், கல்லூரிகளையும் தரமாக நடத்துக் கோருவதும், தாய்மொழி வழியாகவே உயர் கல்வி வரை கொடுக்கக் கோருவதும்தான் இப்பிரச்சினைக்கு ஒரே மாற்று. தனியார்மய மோகத்தாலும், ஆங்கில வழிக் கல்வி மீது இருக்கும் குருட்டுதனமான பக்தியின் காரணமாகவும் நடுத்தர வர்க்கம் இவ்வுண்மையைப் புரிந்து கொள்ள மறுக்கிறது. இதனைப் புரிந்து கொண்டு, கல்வியைத் தனியார்மயமாக்குவதை எதிர்த்துப் போராடாத வரை, இந்தக் கட்டணக் கொள்ளை என்ற சிலுவையை அவ்வர்க்கம் சுமந்துதான் தீர வேண்டும்.

சென்னையில் உள்ள மாதா பொறியியல் கல்லூரி அதிகக் கட்டணம் வசூலிப்பதாக வந்த புகாரையடுத்து, தமிழக அரசின் கண்காணிப்புக் குழுத் தலைவர் ராமசாமி (இடமிருந்து மூன்றாவது) அக்கல்லூரியில் கடந்த ஆண்டு நடத்திய திடீர் சோதனை நாடகம்.



● ரஹீம்

www.padippakam.com

# சாதி கௌரவக் கொலைகள்:

# கேலிக்கூத்தானது இந்தியக் 'குடியரசு'

## அரியானாவில் ஜாட் சாதிவெறியர்களின் கொட்டத்திற்கு அரசும், ஆளும்கும்பலும் ஒத்தூதுகின்றன.

கடந்த 2007-ஆம் ஆண்டில் அரியானாவைச் சேர்ந்த 23 வயதான மனோஜ் மற்றும் 19 வயதான பாப்லி ஆகியோர் தமது குடும்பத்தினரை எதிர்த்துக் காதல் திருமணம் செய்ததால், அவர்கள் பாப்லி குடும்பத்தினரால் கொல்லப்பட்டனர். அவர்கள் காதல் திருமணம் செய்ததற்காக மட்டுமல்ல, ஜாட் சாதியின் உட்பிரிவாகிய ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்யக் கூடாது என்ற சாதியக் கட்டுப்பாட்டை அவர்கள் மீறிவிட்டதற்காக - அதாவது, ஜாட் சாதிக் கௌரவத்தைக் கீழறுத்துச் சிறுமைப்படுத்திவிட்ட 'மாபெரும் குற்றத்திற்காக' அவர்கள் கொல்லப்பட்டனர். பேருந்தில் அவர்கள் தப்பிச் சென்றபோது, அவர்களை வெளியே இழுத்துப் போட்டு பாப்லியின் குடும்பத்தினர் வெட்டிக் கொன்று, தமது ஜாட் சாதிக் கௌரவத்தைப் 'பெருமையுடன்' நிலைநாட்டினர்.

கடந்த மார்ச் மாதத்தில், அரியானாவின் கர்னால் நீதிமன்றம், ஜாட் சாதி கௌரவத்திற்காக இக் காட்டுமிராண்டித்தனமான கொலைகளைச் செய்த ஐந்து பேரில் ஒருவருக்கு மரணதண்டனையும் மற்றவர்களுக்கு ஆயுள் தண்டனையும் விதித்துள்ளது.

இதைத் தொடர்ந்து ஜாட் சாதியினர் இந்திய அரசியல் சட்டத்தை எதிர்த்து வெளிப்படையாக மிரட்டல்களை விடுத்துள்ளனர். ''ஜாட் சாதியின் உட்பிரிவில் (கோத்திரம்) உள்ள ஒரு ஆணும் பெண்ணும் சகோதர-சகோதரிகளாவர். இவர்கள் திருமணம் செய்யக் கூடாது. ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர் வேறொரு கோத்திரத்தில்தான் திருமணம் செய்ய வேண்டும். இது நீண்டகால ஜாட் சாதியப் பாரம்பரியம். இதில் சட்டமோ, நீதியோ, போலீசோ தலையிடக்கூடாது. இதற்கேற்ப இந்து திருமணச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்'' என்பதுதான் அவர்கள் விடுத்துள்ள எச்சரிக்கை. கடந்த மே 2-ஆம் தேதியன்று குருசேத்திரத்தில் ஜாட் சாதியின் ''மகா பஞ்சாயத்தில்'' முடிவு செய்யப்பட்ட இந்தக் கோரிக்கையை, இச்சாதியைச் சேர்ந்த அனைத்து சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரிப்பதாக ஒரு மாதத்திற்குள் அறிவிக்க வேண்டும் என்றும், இல்லையேல் அவர்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்வோம் என்றும் வெளிப்படையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜாட் சாதிவெறியர்களால் கொல்லப்பட்ட மனோஜின் தாயார் சந்திரபதி பேர்வால்.



நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்னரும், சாதிவெறியர்களால் வெட்டிக் கொல்லப்பட்ட மனோஜின் குடும்பத்தினர் இன்னமும் அச்சத்திலேயே உள்ளனர். தங்களது குடும்பத்தாரை சாதி வெறியர்கள் மிரட்டுவதாகவும், இலட்சக்கணக்கில் பணம் தருவதாகக் கூறி வழக்கைத் திரும்பப் பெறுமாறு அச்சுறுத்துவதாகவும் மனோஜின் சகோதரி சீமா கூறுகிறார்.

உண்மையில், ஒரே கோத்திரத்தைச் சேர்ந்த தம்பதிகளுக்கு எதிரானதாக மட்டும் இந்த சாதிப் பஞ்சாயத்து தீர்ப்புகள் இல்லை. இப்படியொரு முகாந்திரத்தை வைத்து எல்லா விவகாரங்களையும் தமது கட்டுப்பாட்டில் நடத்த வேண்டும் என்பதே சாதியப் பஞ்சாயத்துகளின் உண்மையான நோக்கமாக உள்ளது. ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள், ஒருவரது தாயின் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள், ஒருவரது பாட்டியின் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் தம்பதிகளாகத் திருமணம் செய்யக் கூடாது; ஒரே கிராமத்திலோ அல்லது அருகிலுள்ள கிராமங்களிலோ திருமணம் செய்யக் கூடாது என்றெல்லாம் இக்கட்டப் பஞ்சாயத்துகளின் தீர்ப்புகள் வெவ்வேறு அவதாரங்களை எடுக்கின்றன. சாதியப் பஞ்சாயத்துகளின் தீர்ப்பை எதிர்ப்போரும் விமர்சிப்போரும் சமூகப் புறக்கணிப்பு செய்யப்படுகின்றனர்.

அண்மையில் ஜவுந்தி, அசான்தா, தாரணா, சிங்வால், ஹதாவ்தி, லுடானா மற்றும் பிற கிராமங்களில் சாதிய கட்டப்பஞ்சாயத்துகள் அளித்துள்ள தீர்ப்புகளே இந்த உண்மையை நிரூபித்துக் காட்டுகின்றன. ஒரே கோத்திரத்தில் நடந்த திருமணங்களே அல்ல என்ற போதிலும், இக்கிராமங்களைச் சேர்ந்த புதுமணத் தம்பதிகளைச் சகோதர-சகோதரிகள்தான்



படிப்பகம்

www.padippakam.com

என்று தீர்ப்பளித்து, ஜாட் பஞ்சாயத்துகள் அக்குடும்பங்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்துள்ளன.

வேத்பால்மோன் என்ற இளைஞர் தனது மனைவியை மாமனார் குடும்பத்தினர் அடைத்து வைத்திருப்பதிலிருந்து மீட்டுவர முயன்றார். அவர் ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்தவரோ, ஒரே கிராமத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்தவரோ அல்ல. இருப்பினும், அவர் சாதியப் பஞ்சாயத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு, அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மணப்பெண்ணின் மூலம் தந்தைவழிச் சொத்து கைமாறிவிடக் கூடாது என்பதற்காகவே, அந்த இளைஞர் கடந்த ஆண்டில் அடித்துக் கொல்லப்பட்டார்.

வேறு கோத்திரத்தில், வேறு கிராமத்தில் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் செய்திருந்த போதிலும், கேதிமேகம் கிராமத்தில் சாதியப் பஞ்சாயத்தின் கட்டளையை மீறிவிட்டதற்காக, புதிதாக மணம் முடித்த இளைஞனின் தந்தையை வாயில் செருப்பைக் கவ்விக் கொண்டு கிராமம் முழுக்கச் சுற்றிவருமாறு அவமானப்படுத்தித் தண்டிக்கப்பட்டுள்ளார்.

அரியானாவின் முன்னாள் முதலமைச்சரான ஹுக்கம் சிங் இச்சாதிய கட்டப்பஞ்சாயத்து கூட்டங்களில் பங்கேற்றுத் தீர்ப்பளிக்கிறார். முன்னாள் போலீசு தலைமை இயக்குனர் இக்காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படையாக ஆதரிக்கிறார். இந்த 'முன்னாள்'கள் மட்டுமின்றி, தரகுப் பெருமுதலாளியும் காங்கிரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நவீன் ஜிண்டால் வெளிப்படையாகவே சாதியப் பஞ்சாயத்துகளையும், அவற்றின் காட்டுமிராண்டித்தனமான தீர்ப்புகளையும் ஆதரிக்கிறார். ஷாடிலால் பத்ரா எனும் மற்றொரு காங்கிரசு எம்.பி., ஒரே சாதியின் உட்பிரிவில் ஆணும் பெண்ணும் திருமணம் செய்வதைத் தடைசெய்யக் கோரி நாடாளுமன்றத்தில் தனிநபர் மசோதாவைத் தாக்கல் செய்துள்ளார். எதிர்க்கட்சியான ஓம்பிரகாஷ் சௌதாலாவின் இந்திய தேசிய லோக்தளமும் ஜாட் சாதியக் கட்டப் பஞ்சாயத்துகளின் கோரிக்கையை ஆதரித்துள்ளது.

மனோஜ்-பாப்லி தம்பதிகளின் கொலை, வகைமாதிரிக்கு ஒரு உதாரணம்தான். டெல்லி, அரியானா, ராஜஸ்தான், உ.பி. மாநிலங்களில் ஜாட் சாதிய கட்டப் பஞ்சாயத்துகளால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 100 இளம் தம்பதிகள் கொல்லப்படுகின்றனர். இம்மாநிலங்களில் மட்டுமல்ல, தமிழ்நாடு உள்ளிட்டு பல மாநிலங்களில் இன்னமும் சாதி கௌரவக் கொலைகள் தொடர்கின்றன. 2003-ஆம் ஆண்டில் விருத்தாசலத்துக்கு அருகே, முருகேசன் - கண்ணகி தம்பதிகள் வன்னிய சாதி வெறியர்களால் கோரமாகக் கொல்லப்பட்ட துயரச் சம்பவம் தமிழகத்தின் அவமானமாக நீடிக்கிறது.

தாலிபான் பாணியிலான இச்சட்டவிரோத சாதியப் பஞ்சாயத்துகள் வெளிப்படையாகவே இந்திய சட்டத்தை மீறுகின்றன. சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், அதாவது ''ஊபா'' சட்டம் இத்தகைய சட்டவிரோத சாதியக் கட்டப் பஞ்சாயத்துகள் மீது பாய்வதில்லையே, அது ஏன்?

புரையோடிப்போன சாதியக் கட்டுமானத்தைத் தாங்கிப்பிடிக்கும் இந்துமதம், பொருளாதாரத்திலும் அரசியல் அதிகாரத்திலும் செல்வாக்கு செலுத்தும் ஆதிக்க சாதிகள், பெயரளவில் இவற்றை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு நடைமுறையில் இக்காட்டுமிராண்டித்தனத்துக்கு அனுசரணையாக நிற்கும் இந்திய அரசியலமைப்பு முறை, பக்கமேளம் வாசிக்கும் ஓட்டுப் பொறுக்கிகள் ஆகிய இவையனைத்தும் இத்தகைய சாதி ஆதிக்க வெறித்தனம் நீடிக்க அடிப்படைகளாக உள்ளன. ஆதிக்க சாதிவெறிக்கு இந்திய அரசியலமைப்பு முறை அனுசரணையாக நிற்பதால்தான், மரண தண்டனை விதிக்கப்பட்ட பின்னரும், சாதி கௌரவக் கொலைகளை இச்சட்டவிரோத சாதியப் பஞ்சாயத்துகள் எவ்வித அச்சமுமின்றி இன்னமும் நடத்திக் கொண்டிருக்கின்றன.



பார்ப்பனர் அல்லாத கீழ்சாதி இளைஞனைத் திருமணம் செய்து கொண்டதால், தனது தாயாலேயே கொல்லப்பட்ட இளம் பத்திரிகை நிருபர் நிருபமா பதக்கின் சாவுக்கு நீதி கோரி, அவரது சக ஊழியர்கள் டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இத்தகைய ஆதிக்கசாதி கட்டப் பஞ்சாயத்துகளுக்கு எதிராக, உழைக்கும் மக்கள் தமது விடுதலைக்கான போராட்டங்களினூடாகத் தங்களது ஜனநாயகத்துக்கும் உரிமைக்கும் அதிகாரத்துக்குமான பஞ்சாயத்துகளைக் கட்டியமைக்க வேண்டும். இத்தகைய உழைக்கும் மக்களின் சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் மன்றங்கள்தான், சாதி ஆதிக்கத்தைத் தகர்க்கும் உண்மையான விடுதலைக்கான பஞ்சாயத்துகளாக அமையும்.

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# ஜாட் சாதிவெறித் தீயில் கருகிப் போன தாழ்த்தப்பட்டோர் வாழ்வு

**தாழ்த்தப்பட்டோர் சுயமரியாதையோடு வாழ முயலுவதை, ஆதிக்க சாதிவெறியர்களால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.**

**தா**ழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரரீதியில் முன்னேறுவதை ஆதிக்க சாதிகளால் எவ்வாறு தாங்கிக் கொள்ள இயலாது என்பதை விளக்க, ''தீண்டப்படாதவர்கள்'' எனும் -லில், இராசஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சாமர் சாதி மக்கள், தங்கள் வீட்டுத் திருமணத்தை சற்று விமரிசையாகக் கொண்டாடிய காரணத்திற்காக, ஜாட் ஆதிக்க சாதிவெறியர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடுகிறார், அம்பேத்கர். இது நடந்து 85 வருடங்களுக்கு மேலாகியும், இன்றும் பொருளாதாரரீதியில் முன்னேறும் தாழ்த்தப்பட்டோர், ஆதிக்க சாதியினரால் தாக்கப்படுவது தொடர்கிறது.



மிர்ச்பூர் கிராமத்தில் ஜாட் சாதிவெறியர்களால் கொளுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வால்மீகி சாதியினரின் வீடுகள்.

கடந்த ஏப்ரல் மாதம் அரியானாவிலுள்ள மிர்ச்பூரில் தாழ்த்தப்பட்ட வால்மீகி சாதியினரின் 20 வீடுகள், 400 ஜாட் சாதி வெறியர்களால் கொளுத்தப்பட்டன. போலீசார் கைகட்டி வேடிக்கை பார்த்து கொண்டிருக்க, தப்பிக்க முடியாதபடி தீயில் மாட்டிக்கொண்ட உடல் ஊனமுற்ற 18 வயதான இளம்பெண் ஒருவரும், அவரைக் காப்பாற்ற சென்ற, நோய்வாய்ப்பட்ட அவரது தந்தையும் எரிந்து சாம்பலாயினர். இதனைத் தொடர்ந்து ஜாட் சாதி வெறியர்கள் 31 பேர் கைது செய்யப்பட்டனர். தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்குவதைத் தங்களது பிறப்புரிமையாகப் பார்க்கும் ஜாட் வெறியர்கள், இந்தக் கைது நடவடிக்கையினை எதிர்த்து, ''காப்'' எனப்படும் 45 கிராமங்களின் பஞ்சாயத்தைக் கூட்டிக் கைதானவர்களை விடுவிக்கக் கோரியுள்ளனர். மாவட்ட நிர்வாகத்தின் உயரதிகாரி ஒருவர் கலந்து கொண்ட இந்த சாதிக் கட்டப் பஞ்சாயத்துக்குத் தலைமை ஏற்றவரோ, அரசு பள்ளி ஆசிரியர்.

தாழ்த்தப்பட்டவர் வளர்க்கும் நாய் ஒன்று ஜாட் சாதியைச் சேர்ந்த ஒருவரைப் பார்த்துக் குரைத்ததுதான் இந்தக் கொடூரத் தாக்குதலுக்குக் காரணமாம். ஆனால், உண்மையில் தாழ்த்தப்பட்ட வால்மீகி மக்களின் கல்வி, பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டும், அவர்கள் மீதான ஜாட் சாதியினரின் ஆதிக்கப் பிடி தளர்ந்து வருவது கண்டும் பொறுக்கமாட்டாது, அவர்களைத் தாக்கத் தருணம் பார்த்திருந்த சாதி வெறியர்களுக்கு நாய் குரைப்பு ஒரு முகாந்திரம் மட்டுமே.

ஜாட்டுகளின் சாதிவெறி தாக்குதல்கள் இந்தப் பகுதிக்குப் புதிதல்ல. கடந்த வருடம் இதே பகுதியில், ஜாட் சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இரண்டு பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக இழுத்துச் சென்றுள்ளனர். 1997-இல் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகள், கூலி உயர்வு கேட்டுப் போராடிய பொழுது சமூகப் புறக்கணிப்பு செய்து, வீடுகளைத் தாக்கி எரித்துள்ளனர். 2005-இல் சோனாபட் மாவட்டம் கோஹனா நகரில் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளைச் சூறையாடி எரித்துள்ளனர்.

மிர்ச்பூர் கிராமத்தில் 300 தாழ்த்தப்பட்டோர் குடும்பங்கள் உள்ளன. இங்குள்ள நிலங்கள் அனைத்தும் ஜாட்டுகளுக்கே சொந்தம். தாழ்த்தப்பட்டவர்கள் காலம் காலமாக ஜாட்டுகளின் நிலங்களில் விவசாயக் கூலிகளாக வேலை செய்து வருகின்றனர். ஆயினும், அவர்களை ஜாட்டுகள் விருப்பம் போல ஆட்டிவைத்த நிலை இன்று இல்லை. ராம் அவதார் என்பவரது தலைமையில்



படிப்பகம்

www.padippakam.com



ஜாட் சாதிவெறி பயங்கரவாதம்: உயிருடன் எரிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட - உடல் ஊனமுற்ற பெண்ணின் வீட்டில் நாசமாகிக் கிடக்கும் சைக்கிள் மற்றும் உடைமைகள்.

விவசாயக் கூலிகள் அமைப்பாகியுள்ளனர். கொடுத்த கூலியைக் கைகட்டி வாய் பொத்தி வாங்கிக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்டோர், இன்று சுயமரியாதையுடன் தமக்கான நியாயமான கூலியைக் கேட்டுச் சட்டரீதியாகப் போராடி வாங்குகின்றனர். மேலும், தாழ்த்தப்பட்டவர்கள் இன்று ஒப்பீட்டளவில் படிப்பறிவு பெற்றவர்களாக உயர்ந்துள்ளனர். குடும்பத்துக்கு ஒருவராவது உயர்நிலைப் பள்ளி வரை படித்திருக்கிறார்.

முன்பு தாங்கள் ஆதிக்க சாதியினரை அண்டியிருந்த போது பட்ட அவமானங்கள் பற்றிப் பேசும் போது, ஓய்வு பெற்ற கல்லூரி முதல்வரான ராம் குமார், 1995-இல் நடந்த ஒரு சாதிக் கலவரத்திற்குப் பிறகு, அமைதி திரும்புவதற்காக ஜாட் சாதியினர் முன் தாழ்த்தப்பட்டவர்கள் தமது தலைப்பாகையைக் கழற்றிய சம்பவத்தை நினைவு கூறுகிறார். ஆனால், இன்றைய தலைமுறையோ இது போன்ற அவமரியாதைகளைப் பொறுத்துக் கொள்ளத் தயாராக இல்லை என அவர் கூறுகிறார். இப்பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்டோர் பலர் ஆசிரியர்களாகவும், பொறியாளர்களாகவும், அரசு உயரதிகாரிகளாகவும் உயர்ந்துள்ளனர். பலரும் கல்வியறிவு பெற்றிருந்தாலும், வேலைவாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காத காரணத்தால், ஜாட்டுகளின் நிலங்களில் இன்னமும் பலர் கூலிகளாகவே உள்ளனர்.

இவ்வாறு சுயமரியாதையோடு தாழ்த்தப்பட்டவர்கள் தமக்குச் சமமாக வாழ்வதைப் பொறுக்காத ஜாட்டுகள், வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர்களைத் தாக்கி வருகின்றனர். தாழ்த்தப்பட்டவர்களை இழிவான பெயர் சொல்லி அழைத்து வம்புக்கிழுப்பது, கட்டிலில் உட்காரக் கூடாது என மிரட்டுவது, விவசாயக் கூலி கொடுக்காமல் இழுத்தடிப்பது என்று தொடர்ந்து சீண்டி வருகின்றனர். இங்கு ஒவ்வொரு வருடமும் விவசாயக் கூலிகளுக்கு சரிவரக் கூலி கொடுக்காத வழக்குகள் மட்டும் 200 வரை பதிவாகின்றன.

இந்தப் பகுதியைச் சேர்ந்த சந்தர் சிங் என்பவர் ஆடு மேய்த்து சேர்த்த காசில், ஜாட்டுகள் மத்தியில் மாடி வீடு கட்டி, வீட்டிலேயே மளிகைக் கடை வைத்து பிழைப்பு நடத்தி வந்தார். இந்தக் 'குற்றத்திற்கு'த் தண்டனையாக, ஜாட் சாதியினர் அணிதிரண்டு அவரது வீட்டையும் கடையையும் சூறையாடித் தீ வைத்துள்ளனர்.

இந்த அராஜகங்களைத் தட்டிக் கேட்க வேண்டிய போலீசும் நீதிமன்றமும் எப்போதும் ஆதிக்க சாதியினரின் பக்கம்தான் நிற்கின்றன. சமீபத்திய தீ வைப்புச் சம்பவம் முழுவதையும் வேடிக்கை பார்த்த போலீசு, தப்பிப் பிழைத்தவர்களுக்கு உதவக்கூட வரவில்லை. தாக்கி விரட்டப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் 25 கி.மீ. தூரம் நடந்தே சென்று, தமது சொந்த ஏற்பாட்டில் வாகனங்கள் பிடித்துத் தப்பிச் சென்றுள்ளனர். நாய் குரைத்ததாகப் பிரச்சினையை ஜாட்டுகள் ஆரம்பித்த உடனேயே, தாழ்த்தப்பட்டவர்கள் போலீசு அதிகாரிகளிடம் முறையிட்டு உதவி கேட்டுள்ளனர். ஆனால் போலீசோ, ஜாட் சாதியினர் தாக்குதல் தொடுத்துவிட்டுப் பாதுகாப்பாகச் செல்வதற்குத்தான் 'பந்தோபஸ்து' கொடுத்துள்ளது. பிரச்சினையைத் தீர்த்து சமரசம் பேசுவதற்குச் சென்ற வால்மீகி சாதியைச் சேர்ந்த ஒரு பஞ்சாயத்து உறுப்பினரும், ஒரு வட்டார சமிதி உறுப்பினரும் போலீசாரால் அடித்து விரட்டப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் திட்டமிட்ட தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி வரும் ஜாட் சாதிவெறியர்களை ஓட்டுக் கட்சியினர் எவரும் கண்டிப்பதோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவதோ இல்லை. வழக்கமான நிவாரணக் கோரிக்கையைத் தவிர்த்து, தாழ்த்தப்பட்டவர்களை வேறு இடங்களுக்கு குடியேற்றலாமா, அல்லது இரு சாதியினரையும் இணைக்கும் பாதையை மறித்துவிடலாமா என்று பல யோசனைகளை 'அக்கறையுடன்' முன்வைக்கிறார்கள்.

நிலங்கள் அனைத்தும் ஜாட் சாதிவெறியர்களுக்கு சொந்தமாக இருப்பதும், அரசு அவர்களின் பக்கம் இருப்பதுமே ஜாட்டுகளின் கேட்பாரற்ற சாதிவெறித் தாக்குதல்களுக்குப் பின்னணியாகும். அரியானாவில் மட்டுமல்ல, நாடு முழுவதும் தாழ்த்தப்பட்டவர்கள் இது போன்ற பல தாக்குதல்களை அன்றாடம் எதிர்கொள்கின்றனர். அரசும், அதிகாரிகளும், நீதிமன்றமும் கழிப்பறைக் காகிதங்களாகக் கருதி நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் வன்கொடுமை தடுப்பு சட்டத்தை இனிமேலும் நம்பிப் பலனேதும் இல்லை. ஜாட் சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்த, அவர்களின் வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து சிவில் உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் ரத்து செய்யுமாறு நாடெங்கும் தெருப் போராட்டங்களை நடத்துவதும், சாதிவெறியர்களின் தாக்குதலை முறியடிப்பதும், திருப்பித் தாக்கிப் பாடம் புகட்டுவதும்தான் தொடரும் இத்தகைய சாதிவெறித் தாக்குதல்களுக்குத் தீர்வாக அமையும்.

● துரை


படிப்பகம்

# பா.ம.க. இராமதாசின் சமூக நீதி பாரீர்!

**தமிழகத்தின் சேலம் – ஈரோடு மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வன்னிய சாதிவெறி தலைவிரித்தாடுகிறது.**

கொங்கு மண்டலத்தின் வடபகுதியில் உள்ள சேலம் மாவட்ட எல்லையையும் ஈரோடு மாவட்ட எல்லையையும் கொண்டதுதான் கொளத்தூர். கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களும், வன்னியர்களும் பெரும்பான்மையாக வாழும் பகுதி இது.

கொளத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் இந்தச் சாதியினரின் ஆதிக்கமும் தீண்டாமைக் கொடுமையும் தொடர்கின்றன. இதில் ஒரு கிராமம்தான் கருங்கலூர். இங்கு வன்னிய சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, கடந்த ஏப்ரல் 16-ஆம் தேதி போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இரு மாதங்களுக்கு முன்பு கொளத்தூரின் அருந்ததிய இளைஞர் ஒருவர் அந்தியூரை சேர்ந்த வன்னியப் பெண்ணைக் காதலித்துக் கூட்டிக் கொண்டு வர, அந்தியூர் பா.ம.க.வினர் மூலமாக கொளத்தூர் பா.ம.க. கவுன்சிலர் மாரப்பனுக்குத் தகவல் வர, அதற்குள் இளைஞனும் அப்பெண்ணும் காவேரிபுரம் விடுதலை சிறுத்தைகளிடம் தஞ்சம் புகுந்து விட்டனர். அங்கு வி.சி. கட்சியினர் செல்வாக்கு உள்ளதால், பெண்ணை வன்னியர்களால் மீட்டுவர முடியவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த பா.ம.க.வின் வன்னிய வெறியர்கள் அருந்ததிய இளைஞரின் தந்தையான மாரியப்பனின் வீட்டைச் சூறையாடி, அவரின் மனைவி மற்றும் இரு உறவினர்களை அடித்து நொறுக்கினர். இக்கொடுஞ்செயலைப் பற்றி வி.சி. கட்சியினரிடம் மாரியப்பன் சொன்னவுடன், அவர்கள் அடுத்த நாள் ஈரோடு சாலையில் 3 மணி நேரம் மறியல் செய்தனர். வேறு வழியின்றி, மாரப்பன் உள்ளிட்ட சிலர் மீது வன்கொடுமைத் தடுப்பு வழக்கு போடப்படுகின்றது. ஆனால் மாரப்பனோ, சட்டத்தில் ஓட்டைகளை வைத்து போலீசின் உதவியால் எப்படியோ முன்ஜாமீன் பெற்றுக் கைது செய்யப்படாமல் தப்பித்துவிட்டார்.

வன்னிய சாதிப் பெண்ணை தாழ்த்தப்பட்ட அருந்ததி சாதிக்காரன் மணமுடித்து விட்டதாலும், பெண்ணை மீட்க முடியாதிருப்பதாலும் ஆத்திரத்தில் குமுறிய வன்னிய சாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்டோரைச் சமூகப் புறக்கணிப்பு செய்யத் தொடங்கினர். சித்திரைத் திருவிழாவின் போது, ''நமக்கு அடங்காத ஆதிதிராவிடர்கள் இனிமே கோயில் விழாவுக்கு மேளம் அடிக்க கூடாது, அருந்ததியர்களை வெச்சு மேளம் அடிச்சுக்கலாம்'' என்று வன்னிய நாட்டாமைகள் கடந்த ஏப்ரலில் உத்தரவிட்டனர். வன்னிய நாட்டாமைகளின் மிரட்டலுக்கு அஞ்சி மேளம் அடித்த அருந்ததியர்களிடம், முதல்நாள் திருவிழா முடிந்ததும் ஆதி திராவிடர்கள் சிலர் தகராறு செய்ய, அது வாய்ச்சண்டையில் முடிந்திருக்கிறது.




'வீர வன்னியன்' வீரப்பன் படத்துடன், ''10 லட்சம் மானமுள்ள வீர வன்னியர்களே, சித்திரைத் திருவிழாவுக்கு வாருங்கள்!'' என்ற வாசகங்களுடன் கொளத்தூர் பேருந்து நிலையத்தில் சாதியைப் பறைசாற்றி பாட்டாளி மக்கள் கட்சி வைத்திருந்த பிரம்மாண்ட விளம்பரத் தட்டி.

''நீங்க அடிக்க சொன்னீங்க, அவங்க சண்டைக்கு வராங்க'' என்று அருந்ததியர்கள் வன்னியர்களிடம் சொன்னவுடன், அதற்காகவே காத்திருந்த வன்னிய வெறியர்கள் 15-ஆம் தேதி காலை 8 மணியளவில் பா.ம.க. கவுன்சிலர் மாரப்பன் தலைமையில் 200 பேர் கொண்ட கும்பலாகத் திரண்டு கருங்கலூர் ஆதிதிராவிடக் குடியிருப்புக்குள் நுழைந்து வீடுகளை அடித்து நொறுக்கினர். இத்தாக்குதலில் பல ஆதிதிராவிடர்கள் பலத்த காயமடைந்து துடிதுடித்துக் கொண்டிருந்தனர்.

www.padippakam.com

அடித்து முடித்த கும்பல், ஆதிதிராவிடக் குடியிருப்பிற்குள் யாரும் நுழையாதவாறு முற்றுகையிட்டது. இதனால், அவசர முதலுதவிக்கான 108 ஆம்புலன்ஸ் ஊருக்கு வெளியே நான்கு மணி நேரமாக காத்துக் கொண்டிருந்த போதிலும், படுகாயமடைந்த ஆதிதிராவிடர்கள் உடனடியாக மருத்துவ உதவிகூடப் பெறமுடியவில்லை.

கொளத்தூர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினருக்கு இத்தகவல் தெரிந்ததும், அவர்கள் டயர்களை கொளுத்தியும், பேருந்துகளை உடைத்தும் வன்னிய சாதிவெறியாட்டத்தை வெளியுலகுக்குக் கொண்டு வந்தனர். அதன் பின்னர் கொளத்தூர் போலீசு, தனது ஜீப்பில் போய் காயமடைந்தவர்களை மீட்டுக்கொண்டு வந்தது. உள்ளூர் வி.சி.கட்சியினர் பிரச்சினையைக் கிளப்புவார்கள் என்றெண்ணிய போலீசார், 16-ஆம் தேதி காலை கவுன்சிலர் மாரப்பன் உட்பட மூவரை கைது செய்ய கருங்கலூருக்கு வந்தனர். இதை எதிர்த்து, சாதி வெறியர்களால் அணிதிரட்டப்பட்ட வன்னிய மக்கள் மாதேஸ்வரன் மலைப்பாதையை மறித்து மறியலில் ஈடுபட்டு, சாலையில் இருந்த ஒரு லோடு ஜல்லி கற்களையும் போலீசுப் படை மீது வீசித் தாக்குதலை நடத்தினர். இதில் பல போலீசார் மண்டையுடைந்ததும், போலீசு 9 ரவுண்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்தியது. அதில் காயமடைந்த வன்னிய சாதியைச் சேர்ந்த சின்னதுரை மட்டும் அரசு மருத்துவமனையில் இருக்க, காயமடைந்த இதர வன்னியர்கள் வழக்கில் சிக்காமலிருக்க வெளியூரில் இரகசியமாய் வைத்தியம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து, போலீசார் நடத்திய தேடுதல் வேட்டையில் அப்பாவி வன்னிய மக்கள் சித்திரவதை செய்யப்பட்டுத் துவண்டு கிடக்கிறார்கள்.

''ஆதிதிராவிடனுங்க வூடு பூந்து அடிச்சுட்டானுங்க, பாவம் அருந்ததி பொம்பளங்க. சிலருக்கு மண்டையெல்லாம் உடஞ்சு போச்சு, நாங்க ஏண்டா இப்படி பண்ணுறீங்கன்னு சும்மா அவங்க ஊட்டுல போய் ரெண்டு அறை விட்டோம். அவ்வளவுதான், இதை என்னவோ பெரிய பிரச்சினையாக்கிட்டாங்க, இந்தப் பசங்க'' என்று ஆதிதிராவிடர்கள் மீது தாக்குதலும் தொடுத்துவிட்டு, இப்போது புதுப் புரளியையும் கிளப்பி விடுகிறார்கள் பா.ம.க.வினர். ஆதிதிராவிடர்களுக்கும் அருந்ததியர்களுக்கும் இடையில் மோதல் ஏதும் நடக்கவில்லை, அப்படி நடந்தாலும் உன்னை யார் நாட்டாமையாக்கியது? இது, ஆதிக்க சாதி திமிர் அன்றி வேறென்ன?

பா.ம.க தலைவர் ஜி.கே. மணி, சின்ன பிரச்சினைக்கெல்லாம் துப்பாக்கிச் சூடு நடத்துவதாக அரசைக் குற்றம் சாட்டினார். எது சின்ன பிரச்சினை? தாழ்த்தப்பட்ட மக்களின் வீடு புகுந்து அடிப்பது சின்னப் பிரச்சினையா? அவர்களுக்கு கொளத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் கோயிலிலே நுழைய அனுமதி இல்லை, தீ மிதிக்கவோ, கரகம் எடுக்கவோ அனுமதி இல்லை, கருங்கலூர் முதல் கோவிந்தப்பாடி வரை தாழ்த்தப்பட்டவர்களுக்கு முடி வெட்ட சலூன் கடைகள் மறுப்புத் தெரிவிக்கின்றன. இதெல்லாம் வன்னிய சாதிவெறியர்களுக்குச் சிறிய பிரச்சினையாம்!

> **தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொளத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் கோயிலிலே நுழையவோ, தீ மிதிக்கவோ, கரகம் எடுக்கவோ அனுமதி இல்லை; முடி வெட்ட சலூன் கடைகள் மறுப்புத் தெரிவிக்கின்றன. இவையெல்லாம் வன்னிய சாதிவெறியர்களுக்குச் சின்னப் பிரச்சினையாம்!**

சட்டசபையில், சின்ன பிரச்சினைக்குத் துப்பாக்கிச் சூடு என்று ஜி.கே மணி பேசும் போது, வி.சி.கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் அதற்கெதிராக வாய் திறக்கவில்லை. வன்னியர்கள் மீதான துப்பாக்கிச் சூடு என்று ஜி.கே.மணி இதை மாநில பிரச்சினையாக்கிய போதிலும், திருமா அதை எதிர்த்து வாய் திறக்கவில்லை. பா.ம.கட்சிக்கு முற்போக்கு வேடமிட்டு விளம்பரம் செய்த அறிவாளிகளும் வாய் திறப்பதில்லை.

கொளத்தூர் கிராமங்களில் விவசாயம் அறவே இல்லை, விவசாயத்தை நாசமாக்கி வாழ்வைப் பறித்த ஆட்சியாளர்களுக்கு எதிராக வன்னியர் சங்கமோ, பா.ம.கட்சியோ எந்தப் போராட்டமும் நடத்தியதில்லை. மாறாக, வன்னிய ஏழைகளைச் சாதிவெறியூட்டி, கலவரத்தில் ஈடுபடுத்தி, அதன் மூலம் வன்னிய 'ஒற்றுமையை'க் கட்டி, ஓட்டுப் பொறுக்குவதில்தான் அவை அக்கறை காட்டுகின்றன.

சாதி ஆதிக்கத்துக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் நடத்தும் போராட்டங்கள் வி.சி.கட்சியின் துரோகம் முற்றுப் பெறாமலே போய்விடுகின்றன. அவ்வப்போது நடத்தப்படும் எதிர்ப் போராட்டங்களால் மட்டும் சாதிவெறியாட்டத்துக்குச் சமாதி கட்டிவிட முடியாது. வன்னிய சாதி உழைக்கும் மக்களிடமிருந்து சாதி வெறியர்களைத் தனிமைப்படுத்துவதும், அச்சாதிவெறியர்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து சிவில் உரிமைகளையும் இட ஒதுக்கீடு சலுகைகளையும் ரத்து செய்யக் கோரிப் போராடுவதும், வன்னியர், தாழ்த்தப்பட்டோர் மட்டுமின்றி அனைத்து உழைக்கும் மக்களின் வாழ்வைப் பறிக்கும் மறுகாலனியாக்கத்திற்கு எதிராக ஐக்கியப்பட்டுப் போராடுவதும் இன்று அவசியமாகியுள்ளது. சாதி ஆதிக்கத்துக்கெதிரான போரில் தாழ்த்தப்பட்டோருடன் இதர பிரிவு உழைக்கும் மக்களும், புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் களமிறங்க வேண்டியது, இன்றைய உடனடிக் கடமையாகியுள்ளது.

● வேடியப்பன்

(செய்தி ஆதாரம்: வினவு.காம்)



படிப்பகம்

www.padippakam.com

## அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு:

# இந்து பயங்கரவாதத்துக்கு இன்னுமொரு சான்று

### ஆர்.எஸ்.எஸ். கும்பலைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துத் தடை செய்யக் கோர வேண்டும்.

இராசஸ்தான் மாநிலத்தின் அஜ்மீர் நகரில் அமைந்துள்ள மிகவும் புகழ் வாய்ந்ததும் மத நல்லிணக்கத்தின் அடையாளமாகவும் திகழும் சூஃபி ஞானி குவாஜா மொய்னுதீன் சிஷ்டியின் திருத்தல வளாகத்தினுள் உள்ள அஹாத்-இ--ர் தர்காவில் கடந்த 2007 ஆம் ஆண்டு அக்டோபர் 11 அன்று நடந்த குண்டு வெடிப்பில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்; 30-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

அஜ்மீர் குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெறுவதற்கு ஐந்து மாதங்கள் முன்பாக, ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்திலுள்ள 17-ஆம் -ற்றாண்டைச் சேர்ந்த மெக்கா மசூதியில் மே 18, 2007 அன்று நடந்த குண்டு வெடிப்பில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இக்குண்டு வெடிப்பைக் கண்டித்து முசுலீம்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது ஆந்திர மாநில போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் 5 பேர் கொல்லப்பட்டனர்.

இக்குண்டு வெடிப்புகளுக்குப் பின் எழுந்த புகை மண்டலம் அடங்கும் முன்பே, அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பிற்கு வங்க தேசத்தைச் சேர்ந்த ஹூஜி என்ற முசுலீம் தீவிரவாத அமைப்பும், ஹைதராபாத் மெக்கா மசூதி குண்டு வெடிப்பிற்கு உள்ளூர் முசுலீம் தீவிரவாதிகளும் காரணமென அரசும், போலீசும், தேசியப் பத்திரிகைகளும் ஒன்று சேர்ந்துகொண்டு குற்றஞ்சுமத்தின.

அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு நடந்த சமயத்தில் மைய உள்துறை அமைச்சராக இருந்த சிவராஜ் பாட்டில், ''இந்தியா-பாகிஸ்தான் இடையே அக்டோபர் 22 அன்று நடைபெற இருக்கும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை விரும்பாத முசுலீம் தீவிரவாத அமைப்புகள்தான் இக்குண்டு வெடிப்பை நடத்தியிருப்பதாக''க் குற்றஞ்சுமத்தினார்.

இந்து மதவெறிக் கும்பலின் பயங்கரவாத முகத்தை அம்பலப்படுத்தியிருக்கும் அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு. (கோப்புப் படம்)



இப்'புலனாய்வின்' அடிப்படையில், இக்குண்டுவெடிப்புகளுக்குக் காரணமானவர்கள் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டு -ற்றுக்கும் மேற்பட்ட முசுலீம் இளைஞர்களும், மதகுருமார்களும் கைது செய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர். மெக்கா மசூதி குண்டு வெடிப்பு தொடர்பாக ஹைதராபாத் நகரைச் சேர்ந்த 140 முசுலீம்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுள் 24 பேர் மீது சதி வழக்கும், அரசுக்கு எதிராகப் போர் தொடுத்த வழக்கும் தொடுக்கப்பட்டது. அந்த 24 பேருக்கும் சர்வதேச முசுலீம் தீவிரவாத அமைப்புகளோடு தொடர்பிருப்பதாகவும் பிரச்சாரம் நடத்தப்பட்டது. அவ்வழக்கு விசாரணையின் முடிவில் அந்த 24 பேரும் அப்பாவிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்ட முசுலீம் இளைஞர்களும்கூட நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்குகளை விசாரித்து வரும் போலீசு அமைப்புகள், இக்குண்டு வெடிப்புகளுக்கும், முசுலீம் தீவிரவாத அமைப்புகளுக்கும் தொடர்பிருப்பதை நிரூபிக்க நியாயமான ஆதாரம் எதையும் கடந்த மூன்று ஆண்டுகளில் காட்டவில்லை. இந்நிலையில், இந்த இரண்டு குண்டு வெடிப்புகளையும் இந்து மதவெறி அமைப்புகள் நடத்தியிருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக இராசஸ்தானைச் சேர்ந்த தீவிரவாத போலீசு படைப் பிரிவு அறிவித்திருக்கிறது. மெக்கா மசூதி வழக்கை விசாரித்து வரும் மையப் புலனாய்வுத் துறையும் இந்த இரண்டு குண்டு வெடிப்புகளுக்கும் ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறிக் கும்பலுக்கும்


படிப்பகம்

www.padippakam.com

தொடர்பிருப்பதற்கான பூர்வாங்க ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளது.

அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு தொடர்பாக தேவேந்திர குப்தா, சந்திரசேகர் என்ற இரு ''இந்துக்கள்'' இராசஸ்தான் தீவிரவாதத் தடுப்பு போலீசாரால் கடந்த ஏப்ரல் மாத இறுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். தேவேந்திர குப்தா, மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள மாலேகான் நகரின் மசூதியொன்றில் 2008-ஆம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்புக்குக் காரணமான ''அபிநவ் பாரத்'' என்ற இந்து மதவெறி அமைப்பைச் சேர்ந்தவன் என இராசஸ்தான் போலீசார் அறிவித்துள்ளனர்; அதே சமயம், அம்மாநில உள்துறை அமைச்சர் சாந்தி குமார் தாரிவால், '' தேவேந்திர குப்தா பீகார் மாநிலத்திலுள்ள முஸாஃபர் பூரில் ஆர்.எஸ்.எஸ்-இன் பிரச்சாரக்காகப் பணியாற்றி வருவது உலகுக்கே தெரியும்'' எனப் பத்திரிகையாளர்களிடம் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.



அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள இந்து மதவெறிக் கும்பலைச் சேர்ந்த தேவேந்திர குப்தா (இடது) மற்றும் சந்திரசேகர்.

அஜ்மீர் மற்றும் மெக்கா மசூதி குண்டு வெடிப்புகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கைபேசி சிம் கார்டுகளின் எண்கள் ஒரே வரிசையில் அமைந்திருப்பது; இந்த இரண்டு குண்டு வெடிப்புகள் நடத்தப்பட்ட விதமும், இக்குண்டு வெடிப்புகளுக்குப் பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்களும் ஒரே விதமாக இருப்பது ஆகியவற்றின் அடிப்படையில் இந்த இரண்டு குண்டு வெடிப்புகளையும் தேவேந்திர குப்தாவுடன் தொடர்புடைய இந்து மதவெறிக் கும்பல்தான் நடத்தியிருக்கும் என இராசஸ்தான் போலீசார் அறிவித்துள்ளனர். மேலும், மாலேகான், அஜ்மீர், மெக்கா ஆகிய மூன்று குண்டு வெடிப்புகளும் ஒரே சதித் திட்டத்தின் மூன்று கண்ணிகள் என்றும் அப்போலீசார் தெரிவித்துள்ளனர்.

மாலேகான் குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள அபிநவ் பாரத் அமைப்பைச் சேர்ந்த பெண் சாமியார் பிரக்ஞா சிங் தாகூர் மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கர்னல் எஸ்.பி. புரோகித்; ஒரிசா மாநிலத்திலுள்ள டாங்ஸ் மாவட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்.-இன் தூணாகச் செயல்பட்டு வரும் சுவாமி அஸிமானந்தா; மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஆர்.எஸ்.எஸ்.-இன் மாவட்டப் பிரச்சாரக்காகப் பணியாற்றி வந்த காலஞ்சென்ற சுனில் ஜோஷி; மாலேகான் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட கைபேசி சிம் கார்டை வாங்கிக் கொடுத்த ராம்நாராயண் கல்சங்கரா என்ற ராம்ஜி ஆகியோருக்கும் தேவேந்திர குப்தாவிற்கும் இடையே நேரடித் தொடர்பு இருந்ததற்கும், இம் மூன்று குண்டு வெடிப்புகளிலும் இவர்கள் அனைவருக்கும் பங்கு இருப்பதற்கும் பூர்வாங்க ஆதாரங்கள் இருப்பதாக ராஜஸ்தான் போலீசாரும், மையப் புலனாய்வுத் துறையினரும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆதாரங்கள் ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறிக் கும்பலின் பயங்கரவாத முகத்தை மட்டுமல்ல, இந்திய அரசின், குறிப்பாக போலீசாரின் இந்து மதவெறிச் சார்பையும் மீண்டுமொருமுறை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டன. முசுலீம்கள் புனிதமாகக் கருதும் மசூதியிலும், தர்காவிலும் முசுலீம் தீவிரவாத அமைப்புகள் குண்டு வைக்கும் முரண்பாடு பற்றி போலீசாரிடம் கேள்வி எழுப்பப்பட்ட சமயங்களில், போலீசார், ''முசுலீம் தீவிரவாத அமைப்புகள் தங்களின் தந்திரத்தை மாற்றிக் கொண்டுவிட்டனர்; இந்துக்களுக்கு எதிராக முசுலீம்களைத் தூண்டிவிடவே அவர்கள் மசூதி-தர்காகளில் குண்டு வைப்பதாக'' எவ்வித ஆதாரமும் இல்லாத கதையைத் தயாரித்துக் கூறி வந்தனர்.

மாலேகான் குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவ அதிகாரி எஸ்.பி. புரோகித்திடம் விசாரணை நடத்தியபொழுது, அவர், ''மாலேகான் குண்டு வெடிப்பில் மட்டுமின்றி, அஜ்மீர் தர்கா மற்றும் மெக்கா மசூதி குண்டு வெடிப்புகளிலும் தங்களுக்குள்ள பங்கையும், அக்குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்டுள்ள இந்து மதவெறியர்களின் பெயர்களையும்'' விலாவாரியாக விசாரணை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியுள்ளார். இத்தகவல்கள் அனைத்தும் ஆந்திர மாநிலப் போலீசார் உள்ளிட்ட பல்வேறு விசாரணை ஏஜென்சிகளுக்கும் சொல்லப்பட்ட பிறகும்


படிப்பகம்

கூட, போலீசு அதிகாரிகள் இக்குண்டு வெடிப்புகளுக் கும் இந்து மதவெறி அமைப்புகளுக்கும் இடையேயான தொடர்பு குறித்துத் தீவிரமாக விசாரிக்கவில்லை என்பது இப்பொழுது அம்பலமாகியுள்ளது.

குறிப்பாக, ஆந்திர மாநிலப் போலீசார் மெக்கா மசூதி குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப் பட்ட முசுலீம்கள் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப் பட்ட பிறகும்கூட, அவர்களைத் தொடர்ந்து கண்கா ணிப்பது என்ற போர்வையில் துன்புறுத்தி வந்துள்ளனர். அஜ்மீர், மெக்கா, மாலேகான் குண்டு வெடிப்புகளுக்கு இடையேயுள்ள ஒற்றுமை குறித்து ஏராளமாக ஆதாரங் கள் 2008-ஆம் ஆண்டிலேயே கிடைத்துவிட்டபோதும், ''முசுலீம்தான் குண்டு வைப்பான்'' என்ற போலீசின் காவிப் புத்திதான், இக்குண்டு வெடிப்புகளில் சம்பந்தப் பட்ட இந்து மதவெறி பயங்கரவாதிகளை உடனடியா கக் கைது செய்யாமல் பாதுகாத்து வந்துள்ளது.

''முசுலீம்தான் குண்டு வைப்பான்'' என்ற போலீசின் காவிப் புத்திதான், அஜ்மீர் தர்கா, மெக்கா மசூதி குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்ட இந்து மதவெறி பயங்கரவாதிகளை உடனடியாகக் கைது செய்யாமல் பாதுகாத்து வந்துள்ளது.

போலீசாரோ தங்களின் காவிப் புத்தியை, ''போதிய ஆதாரம் திரட்ட வேண்டாமா?'' என்ற காரணத்தைக் கூறி மறைத்துக் கொள்ள முயலுகின்றனர். எவ்வித ஆதா ரமும் இல்லாமல் முசுலீம்களைக் கைது செய்து சித்திர வதைச் செய்யத் தயங்காத போலீசார், இந்து மதவெறி பயங்கரவாதிகளைக் கைது செய்ய தக்க ஆதாரங்களைக் கேட்பது வேடிக்கையானது மட்டுமல்ல; அது, போலீ சாரின் மூசுலீம் வெறுப்பு இந்து மதவெறி பாசிசப்புத்தி யையும் சேர்த்தே காட்டுகிறது.

குண்டு வெடிப்புகளில் ஆர்.எஸ்.எஸ். இந்து மத வெறி பயங்கரவாதிகளின் பாத்திரம் மேலும் மேலும் அம்பலமாகிவரும் நிலையில், மே 2008-இல் நடந்த 70 அப்பாவிகளைப் பலிகொண்ட ஜெய்ப்பூர் தொடர் குண்டு வெடிப்பு; 2007-ஆம் ஆண்டு நடந்த 68 பாகிஸ் தானியர்களைப் பலிகொண்ட சம்ஜௌதா விரைவு வண்டி குண்டு வெடிப்பு; ஹைதராபாத் நகரில் நடந்த 45 பேரைப் பலிகொண்ட லும்பினி பூங்கா மற்றும் கோகுல் சாட் பாந்தர் இரட்டை குண்டு வெடிப்பு ஆகி யவை பற்றி மறுவிசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையினை முசுலீம்கள் மட்டுமின்றி, பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் எழுப்பியுள்ளன.

இந்திய அரசும், அதன் அதிகார வர்க்கமும், 'மதச்சார் பற்ற' ஓட்டுக்கட்சிகளும் இந்து மதவெறி பயங்கரவாதி களைத் தண்டிப்பதில் போதிய அக்கறையும் உறுதியும் காட்டுவதில்லை என்பது ஏற்கெனவே பல்வேறு வழக் குகளில் அம்பலமாகியிருக்கிறது. இந்நிலையில், இந்து மதவெறி பயங்கரவாதிகள் சட்டத்தின் ஓட்டைகளை யும், அரசின் காவிச் சார்பையும் பயன்படுத்திக் கொண்டு தப்பிவிடக் கூடாதெனில், இந்து மதவெறி பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தை உழைக்கும் மக்கள் மத்தியில் இன்னும் ஆழமாகவும் தீவிரமாகவும் கொண்டு செல்ல வேண்டிய அவசியம், புரட்சியாளர்களின் முன், மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகளின் முன் எழுந்து நிற்கிறது.

● செல்வம்

---

11-ஆம் பக்கத் தொடர்ச்சி

**களை ஈடுபடுத்துதல்'** - சல்வா ஜுடும் போன்ற கூலிப் படைகளையும் பிழைப்புவாதிகளையும் உருவாக்குதல்; 'பாதுகாப்பு' - அரசுப்படைகளை அதிகரிப்பதுடன் தனி யார் படைகளுக்கும் அனுமதி தருதல்; **'ஊடகக் கொள் கைகள்** - உண்மையை வெளியுலகுக்கு கூறும் ஊடக வியலாளர்களைத் தடுத்து நிறுத்துதல்; **'நிலச்சீர்திருத் தம்'** - கனிமவளம் நிறைந்த கிராமங்களைத் தரகு முத லாளிகளுக்கு உரிமையாக்குதல்; **'சாலைகள் அமைத் தல்'** - கொள்ளையிட்ட கனிம வளத்தைக் கஷ்டமில் லாமல் கொண்டு செல்ல பாதை அமைத்துத் தருதல்; **'வேலைவாய்ப்பு'** - போலீசு வேலை, செக்யூரிட்டி வேலை, மரம் வெட்டும் வேலை, ரோடு போடும் வேலை ஆகிய வேலைவாய்ப்புகளைப் பழங்குடி மக் களுக்கு வழங்குவதன் மூலம் அவர்கள் தலையில் அவர் களே மண்ணள்ளிப் போட்டுக்கொள்ள ஏற்பாடு செய் தல் - இவை அனைத்தும் அதிரடியாகச் செய்யப்பட வேண்டும் என்பதுதான் தரகு முதலாளிகள் சங்கத்தின் ஆலோசனை அல்லது ஆணை.

''முதலில் நான் நக்சலைட்டுகளை ஒழித்துக்கட்டு கிறேன். பிறகு வளர்ச்சியைக் கொண்டு வருகிறேன்'' என்று ஒரே வரியில் இதனைச் சொன்னார், உள்துறை அமைச்சர் சிதம்பரம். முதலில் காட்டு வேட்டை, பின் னர் வளர்ச்சித் திட்டம் என்று இரண்டாகப் பிரித்தால் விருந்து மேலும் தாமதமாகும் என்பதால், 'வளர்ச்சி வேட்டையாக' (Development on a Crash basis) சேர்த்து நடத்தச் சொல்கிறார்கள் இந்தியத் தரகு முதலாளிகள். வளர்ச்சி, வேட்டை இரண்டின் பொரு ளும் ஒன்றுதான் என்பதற்கு இதற்கு மேல் விளக்கம் தேவையா என்ன?

● மருதையன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

தவிர்க்க முடியாதது என்று அப்பட்டமாகவே போலீசார் நியாயப்படுத்துகின்றனர். சிறு திருட்டு போன்ற சாதாரண விவகாரங்கள் மட்டுமல்ல; தனக்கு எதிராக உள்ளவருடன் கணக்குத் தீர்த்துக் கொள்ள விரும்பும் எவரும் போலீசுக்கு லஞ்சம் கொடுத்தால் போதும். அவர்களுக்குச் 'சிகிச்சை' அளிக்க போலீசு தயாராகவே உள்ளது. போலீசின் அக்கிரமங்களைத் தட்டிக்கேட்கும் எவரையும், கை அரிப்பெடுத்தால் சாதாரண வழக்குகளுக்காகப் பிடித்து வரப்படும் எவரையும் தாக்குவது போலீசின் வக்கிர குணமாகிவிட்டது. இருப்பினும், இவையெல்லாம் இம்மசோதாவின் படி சித்திரவதையோ, தண்டனைக்குரிய குற்றமோ அல்ல.




திருடியதாக பொய்க்குற்றம் சாட்டப்பட்டு சென்னை-தி.நகர் போலீசாரால் கொடூரமாக வதைக்கப்பட்டதில் கை விரல்கள் நொறுங்கி முடமான அருண்குமார்.
(நன்றி: குமுதம் ரிப்போட்டர்/11.2.2010)

இந்தியாவில், சர்வசாதாரணமாகவே தாழ்த்தப்பட்டோரும், முஸ்லிம்களும், பழங்குடியினரும் போலீசாரால் இழிவாக நடத்தப்பட்டு வதைக்கப்பட்டு வருகின்றனர் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஐ.நா. மாநாட்டுத் தீர்மானமோ, ''எந்தவொரு காரணத்துக்காகவும் எந்தவகையிலும் இழிவுபடுத்தப்பட்டாலும் அது சித்திரவதை'' என்றும் ''குற்றம்'' என்றும் வரையறுக்கிறது. இந்தியாவின் மசோதாவோ, இவ்வாறு இழிவுபடுத்துவதைக் குற்றமாகக் கருதுவதில்லை. ''உண்மையை வரவழைப்பதற்காக அல்லது வாக்குமூலம் பெறுவதற்காக ஒருவரை இழிவுபடுத்தி, கடுமையாக காயங்கள் ஏற்படுத்தி வதைத்தால்தான், அதிலும் சித்திரவதைக்குள்ளானவர் தன்னை இழிவுபடுத்தியதாக நிரூபித்துக் காட்டினால்தான், அது தண்டனைக்குரிய சித்திரவதைக் குற்றமாகும்'' என்கிறது.

இந்த முன்வரைவு மசோதாவின் 5-வது பிரிவின் படி, சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர் ஆறு மாதங்களுக்குள் புகார் கொடுத்தால் மட்டுமே அதை நீதிமன்றங்கள் விசாரிக்க முடியும். சித்திரவதையால் பாதிக்கப்பட்ட ஒருவர் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் மீண்டு வந்து, தனக்கு ஆதரவைத் தேடிக்கொள்ளவும், வழக்கு தொடுக்க ஆதாரங்களையும் நிதியையும் திரட்டவும், எல்லாவற்றுக்கும் மேலாக போலீசை எதிர்த்து வழக்குத் தொடுக்குமளவுக்கு மன உறுதியைப் பெறவும் ஆறுமாத காலம் என்பது போதுமானதல்ல. இந்தியக் கிரிமினல் சட்டங்களின் பொதுவிதிகள், இத்தகைய காலவரம்பைப் பற்றி பேசுவதில்லை. ஆனால் முன்வரைவு மசோதாவோ, ஆறு மாத கால வரம்பை முன்வைத்துப் புகார்கள் பதிவாகாதபடி தடுக்கிறது.

இறுதியாக பிரிவு 6-இன்படி, போலீசு சித்திரவதை பற்றிய புகாரை நீதிமன்றம் வெளிப்படையாக அறிவிக்கக் கூடாது. அப்படிச் செய்ய வேண்டுமென்றால், அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். இதன் மூலம், சித்திரவதை செய்த போலீசுக்காரனைக் கைது செய்யவோ, தண்டிக்கவோ அல்லது இந்த விவகாரத்தைப் பகிரங்கமாக்கவோ கூடாது என்கிறது, இந்த மசோதா.

டெல்லியைச் சேர்ந்த மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் என்ற அமைப்பு கடந்த ஏப்ரல் 13-ஆம் தேதி வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கடந்த ஐந்தாண்டுகளில் 7,468 கொட்டடிக் கொலைகள் இந்தியாவில் நடந்துள்ளன. அதாவது, ஏறத்தாழ ஒருநாளைக்கு 4 பேர் வீதம் போலீசு கொட்டடியில் கொல்லப்படுகின்றனர். கடந்த ஆறாண்டுகளில் போலீசு கொட்டடிகளில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 41.66 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் போலீசு-இராணுவ வதையின் கதை வரலாற்று ரீதியானது. காலனிய ஆட்சியாளர்களிடமிருந்த ஒடுக்குமுறைக் கருவியான போலீசு-இராணுவத் துறையை, அதே கட்டுக்கோப்பு-சட்டதிட்டங்களுடன் இந்திய ஆட்சியாளர்கள் வரித்துக் கொண்டனர். காலனிய காலத்தைவிட இன்னும் கொடியதாகவும் பூதாகரமாகவும் போலீசு-இராணுத்துறை வளர்ந்திருப்பதைப் போலவே, அதன் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதை முறைகளும் பெருத்துள்ளன. சித்திரவதைக் கொடூரங்களை நடத்திவரும் மிருகவெறி பிடித்த இந்தியப் போலீசு-இராணுவ அதிகாரிகள் பதவி உயர்வும் பதக்கங்களும் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர்.

இந்திய அரசு தன் மீதான சித்திரவதைக் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக் கொண்டு, மனித உரிமைகளை மதித்து நடக்கும் மாபெரும் ஜனநாயக நாடாகச் சித்தரித்துக் கொள்ளும் முயற்சியாகவே இம்மசோதாவை கொண்டுவந்துள்ளது. இந்த பித்தலாட்ட மசோதா மூலம், நாட்டு மக்களைக் கண்ணியமாக நடத்துவதைப் பற்றி அனைத்துலகச் சட்டங்கள் முன்வைக்கும் குறைந்தபட்ச நடைமுறையைக் கூட அது காற்றில் பறக்க விட்டுள்ளது.

● மணி



படிப்பகம்

www.padippakam.com
PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No:42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11



# காட்டுவேட்டை:
# அம்பலமானது இந்திய அரசின் பித்தலாட்டம்!

இவர் பெயர் மாத்வி ஹுரே. மூன்று குழந்தைகளுக்குத் தாயான இவர் சட்டிஸ்கர் மாநிலம், தண்டேவாடா மாவட்டம், சிங்கன்மடு கிராமத்தைச் சேர்ந்த இளம் விதவை. சட்டிஸ்கர் அரசுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் ஒன்பதாவது மனுதாரராகக் கைநாட்டிட்டுள்ளார். ''மாத்வி ஹுரே என்றொரு மனுசியே கிடையாது. அவள் வெறும் கற்பனை; ஒருபோதும் இருந்தவள் இல்லை. மனுதாரர் ஒன்பது என்பது இல்லாத ஒருத்தியாகும்'' என்று ஏப்ரல் 19-ந் தேதி டெல்லி உச்சநீதி மன்றத்தின் முன்பு இந்தியத் தலைமை வழக்குரைஞர் வாதிட்டிருக்கிறார்.

ஆனால், இரத்தமும் சதையும் உயிருமாகக் கைக் குழந்தையோடு ஐந்து மாதங்களுக்கு முன்பு பத்திரிக்கையாளர்கள், மனித உரிமைப் போராளிகள் முன்னிலையில் டெல்லிக்கு வந்து சான்றுரை அளித்த மாத்வி ஹுரேவின் புகைப்படத்தை வெளியிட்டு, இந்திய அரசின் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தியிருக்கிறது, ''டெகல்கா'' ஏடு.

2009 அக்டோபர் இரண்டாவது வாரம். விவசாய வேலைகளை முடித்துக் கொண்டு தனது குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்த மாத்வி தேவாவை சுட்டுக் கொன்றனர், மத்திய ரிசர்வ் போலீசுப் படையினர். சற்றுத் தொலைவில் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டு, பார்க்கப் போன அவர் மனைவி மாத்வி ஹுரே அதிர்ச்சியில் உறைந்து போனார். போலீசார் மாத்வி தேவாவின் மிதிவண்டியை நொறுக்கிப் போட்டதையும், உடலைத் துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்ததையும் சிங்கன்மடு கிராமவாசிகள் நேரில் கண்டிருக்கிறார்கள்.

''என் கணவர் ஒரு விவசாயி, நக்சல் அல்ல. அவரை ஏன் அவர்கள் கொன்றார்கள்? கொலையாளிகளைத் தண்டித்தே ஆக வேண்டும்'' என்று ஆத்திரம் பொங்கக் கதறுகிறார், அந்த ஆதிவாசிப் பெண். அவரைப் போலவே 16 பேர் நீதி கோரி உச்ச நீதிமன்றத்தின் படியேறியுள்ளனர்.

அவர்கள், ''காட்டுவேட்டை'' நடவடிக்கையின் கொடூரத்திலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள், அதனால் பாதிக்கப்பட்டவர்கள்; அதற்குப் பலியானவர்களின் உறவினர்கள், அக்கொடூரங்களுக்குச் சாட்சியமானவர்கள். கத்தியால் குத்தப்பட்ட பார்வையற்றவரின் ஒரு குடும்பம், மார்புகள் வெட்டி வீசப்பட்ட ஊனமுற்ற எழுபது வயதான ஒரு மூதாட்டி, - இப்படிப் பட்டவர்கள் உச்சநீதி மன்றத்தை அணுகினர். அவர்கள் அனைவரையும் உச்சநீதி மன்றத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அவர்களை எங்கேயும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று பின்னர் அரசு கைவிரித்து விட்டது. ''சட்டிஸ்கரில் என்ன நடக்கிறது? நாங்கள் அதிர்ச்சி அடைகிறோம்'' என்று ஆத்திரம் பொங்கக் கூறினார், நீதிபதி சுதர்சன் ரெட்டி.

சட்டிஸ்கரில் இத்தகைய கொடூர பயங்கரவாத அட்டூழியங்கள் புரிந்து வருவது, மத்திய ரிசர்வ் போலீசுப் படையின் ராஜநாக (கோப்ரா) பிரிவு. இப்படையின் 76 பேரை கொன்றொழித்ததன் மூலம் உச்சநீதி மன்றம் வழங்காத நியாயமான தீர்ப்பையும் தண்டனையையும் அண்மையில் மாவோயிஸ்டுகள் வழங்கியுள்ளனர். இப்போது சொல்லுங்கள், 'தேசபக்தர்களே' எது நியாயம்?

படிப்பகம்